Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY தேசிய தினசரி

போன்: 389 தபால் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ வைகாசி 26 ஆம் நாள் துல்ஹஜ் 23 (8-6 61) வியாழக்கிழமை இதழ் 98

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

பெங்களூர்-2.

# விஸா வழக்கில் தீர்ப்பு

## இந்தியாவில் சிங்கள பட உற்பத்திக்கு விரைவில் தடை

### அரசாங்கத்துக்கு உள்நாட்டு மந்திரி சிபார்சு

கொழும்பு, புதன்

**சிங்களப்படங்கள் இந்தியாவில் தயாரிக்கப்படுவதை உடனடியாகத் தடைசெய்ய விரும்புவதாக உள்நாட்டு மந்திரி திரு. மைத்திரிபாலசேனநாயகா அரசாங்கத்திடம் தெரிவித்திருக்கிறர். அதேசமயம், சிங்களத்தில் "டப்" செய்யப்பட்ட இந்தியப் படங்களை இலங்கையில் அனுமதிக்கப்படக்கூடாது எனவும் அவர் சிபார்சு செய்திருக்கிறர்.**

"இந்த இரண்டு நடவடிக்கைகளும் இலங்கையிலேயே சிங்களப் படங்களை உற்பத்தி செய்வதில் அபிவிருத்தி ஏற்படுத்த வழிசெய்யும். இந்தியாவின் போட்டியினலும், வேறு பல முட்டுக்கட்டைகளினலும் இத்துறையில் இலங்கை முன்னேறவில்லை. இந்தியாவில் சிங்களப் படங்களை உற்பத்தி செய்வதன் காரணமாய் பல கோடிக்கணக்கான ரூபாய் இந்நாட்டைவிட்டுச் செல்கிறது. எனவே மேற்கூறிய நடவடிக்கைகள் இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணியைப் பாதுகாக்கப் பெரிதும் உதவும்" என்றும் மந்திரி கூறினர்.

(5-ம் பக்கம் பார்க்க)

## புகழ்பெற்ற மனேதத்துவ நிபுணர் மரணம்

ஸூரிச் ஜூன் 7

உலகப் புகழ்பெற்ற மனேதத்துவ சாஸ்திரி திரு. குஸ்டாப் யங் இன்று தம் 85 வது வயதில் காலமானர். உலகிலேயே தலைசிறந்த 3 மனேதத்துவ நிபுணர்களில் இவரும் ஒருவர் எனக் கூறப்படுகிறது. 1938 ம் ஆண்டு அவருக்கு ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் "டாக்டர் ஆப் ஸயன்ஸ்" என்ற கௌரவப் பட்டத்தை அளித்தது.

## ஈச்மன் செய்திப் படம்

கொழும்பு, புதன்

ஈச்மன் கொலை வழக்கு சம்பந்தமான செய்திப் படக் காட்சிகள், வயது வந்தோருக்கு மட்டுமே காட்டப்பட வேண்டுமென தணிக்கை சபை முடிவு செய்திருக்கிறது. இக்காட்சியைப் பார்த்த சபை அங்கத்தினர்கள் ஆயிரக்கணக்கான யூதர்கள் ஹிட்லரின் ஜெர்மனியில் படுகொலை செய்யப்படுவதைக் காண நேர்ந்ததே இதற்குக் காரணம்.

## திருமதி கென்னடியின் பதிபக்தி

லண்டன், ஜூன் 7

தமது கணவரைத் திருப்திப்படுத்துவதற்காகவே ஐரோப்பா முழுவதும் பாராட்டக்கூடிய ஆடைகளை திருமதி. கென்னடி தேர்ந்தெடுக்கிறர் என்று திருமதி கென்னடியின் செய்திக் காரியதரிசி செல்வி. பாமேளா டர்னர் கூறியுள்ளார்.

தமது கணவருக்கு திருப்தி ஏற்படும் வகையில், அவர் ஆடை அணிவதாகவும், அவர் எப்போதும் அதனையே வலியுறுத்துவார் என்றும் செல்வி. டர்னர் குறிப்பிட்டுள்ளார்.

## 2 வருட விசாவுக்கு இந்திய வர்த்தகர் கோரிக்கை

### சுப்ரீம் கோர்ட் நிராகரிப்பு

கொழும்பு, புதன்

**தமக்கு 2 வருடம் வாச விஸா வழங்கவேண்டுமென குடியேற்ற வெளியேற்றக் கட்டுப்பாட்டதிகாரிக்குக் கட்டளையிட வேண்டுமென்று எஸ். ராமசாமி என்பவர் தொடர்ந்திருந்த வழக்கை நீதிபதி திரு. குணசேகரா செலவு தொகையுடன் தள்ளுபடி செய்தார்.**

மனுதார் இலங்கையில் வியாபாரம் செய்தவர். 1959-ம் ஆண்டு டிசம்பர்மாதம் 4-ம் தேதி அவர் இந்தியாவுக்கு நாடுகடத்தப்பட்டார். இதைத் தொடர்ந்து அவரது மானேஜர், பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் ராமசாமியின் நாடுகடத்தலின் காரணமாய், தமது வியாபாரம் பெரிதும் பாதிக்கப் பட்டிருப்பதாயும் அவருக்கு பிரவேச அனுமதியும், வாச விசாவும் அளிக்க வேண்டுமென்றும் கேட்டிருந்தார். அதற்கேற்ப ராமசாமிக்கு விசா வழங்குமாறு பிரதமர் உத்தரவிட்டார்.

திருச்சினப்பள்ளியிலுள்ள விசா காரியாலயம் இலங்கையில் பிரவேசிக்கவும், சென்ற ஆண்டு அக்டோபர் 27-ம் தேதிவரை இங்கிருக்கவும் அவருக்கு விசாவழங்கியது. சென்ற ஆண்டு 6-ம் தேதி ராமசாமி இலங்கைக்கு வந்து தமக்கு 2 வருட வாச விசா வழங்கவேண்டுமென குடியேற்ற வெளியேற்றக் கட்டுப்பாட்டதிகாரிக்கு மனுச்செய்து கொண்டார். ஆனல் அது மறுக்கப்பட்டது. பிரதமர்

(5-ம் பக்கம் பார்க்க)

## திரு. ஸ்ரீகாந்தா விசேஷ உதவியாளராக நியமிக்கப்பட்டார்

கொழும்பு, புதன்

கைத்தொழில் உள்நாட்டு கலாச்சார அமைச்சு நிரந்தரக் காரியதரிசியின் விசேஷ உதவியாளராக திரு. எம். ஸ்ரீ காந்தா நியமிக்கப்பட்டுள்ளார்.

அமைச்சின் சிரேஷ்ட உதவிக் காரியதரிசியாய் இருந்த திரு. ராஜகுமாரசுவாமி அரசாங்க சேவையினின்றும் விலகி, இம் மாத இறுதி பகுதியில் பதவியொன்றை ஏற்க ஐக்கியநாடு செல்வதால் இவரது இடத்துக்கு திரு எம். ஸ்ரீகாந்தா நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிகிறது.

## 55வயது அடைந்தவர்களின் சேவைநீடிக்கப்படமாட்டாது

### ஆனல் விஞ்ஞான, தொழில் நுட்ப துறைகளுக்கு விதிவிலக்கு

கொழும்பு, புதன்

**55 வயதை அடைந்த அரசாங்க அதிகாரிகளின் சேவைக்காலம் நீடிக்கப்படமாட்டாது. ஆனல் விஞ்ஞான, தொழில்நுட்பத் துறைகளில் உள்ளவர்களுக்கு, வயதிலிருந்து விதிவிலக்களிக்கப்படும்.**

ஒரு அதிகாரியின் சேவை, தேசிய நலனுக்கு அத்யாவசியமானது எனக்கண்டால், அவருடைய பதவியைத் தொடர்ந்து நீடிக்கவேண்டுமென சிபார்சு செய்யப்பட வேண்டும். அரசாங்கம் இது பற்றி முடிவுசெய்யும்.

## இன்று

நல்லூர்க் கந்தசாமி கோவிலில் இன்று காலை 10-30 மணிக்கு தண்டிகை உற்சவத்தை முன்னிட்டு முத்தமிழ் மணி ஸ்ரீ ஸி. எஸ். எஸ். மணிபாகவதர் "மங்கையர்க்கரசி" என்னும் விஷயம் பற்றி கதாகாலட்சேபம் செய்கிறர்.

## 2 வது வைத்தியக் கல்லூரிக்கு உபமான்யம்

கொழும்பு, புதன்

நேற்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் இரண்டாவது வைத்தியக் கல்லூரி ஒன்றை நிறுவுவதற்காக கல்விமந்திரி ஜனப் பதியுதின் மஹ்மூத் ரூ. 35 லட்சத்துக்கு ஓர் உபமான்யப் பிரேரணையைக் கொண்டுவந்தார்.

## பால்யக் குற்றவாளிகளுக்கு விடுமுறையளிக்கும் மசோதா

கொழும்பு, புதன்

பால்ய குற்றவாளிகளுக்கு விடுமுறையளிப்பது சம்பந்தமான ஒரு மசோதாவை இன்றைய ஜனப்பிரதிநிதிகள் சபையில் கைத்தொழில், உள்நாட்டு, கலாச்சார அமைச்சர் திரு. மைத்ரிபாலசேனநாயகா சமர்ப்பித்தார். விசேஷ காரியங்களில் அவர்கள் பெற்றேர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கு பற்றிக்கொள்ள வாய்ப்பளிக்கும் நோக்கமாக இந்த மசோதா கொண்டுவரப்பட்டது.

ஆனல் விடுமுறையளிக்கு முன் அவர்களைப் பெற்றேர்கள் ஏற்கிறர்களாஎன்னும் நிலைமை ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## டிராக்டர்கள் பற்றி பேச கியூபா தயார்

ஹவானு, ஜூன் 7

கியூபாவில் கடந்த ஏப்ரல் மாதம் முதல் காவலில் வைக்கப்பட்டிருக்கும் 1200 அமெரிக்கர்களை விடுவிப்பதற்கு 500 டிராக்டர்களைப் பெறுவதுபற்றி அமெரிக்கர்களின் தனிப்பட்ட கமிட்டியுடன் கலந்தாலோசிக்க கியூபா தயாராய் இருப்பதாக ஹவானு வானெலி அறிவித்தது.

## கொழும்பு சர்வகலாசாலையில் வெளிமாணவர்களுக்குவகுப்புகள்

### துணைவேந்தர் சர் நிக்கலஸ் அட்டிகலை சிபார்சு

கொழும்பு, புதன்

வெளிமாணவர்களுக்கு கொழும்பு சர்வகலாசாலையில் விசேஷமாக வகுப்புக்களை பேராதனையிலுள்ள விரிவுரையாளர்களைக் கொண்டு நடத்த வேண்டுமென சர்வகலாசாலை துணைவேந்தர் சர் நிக்கலஸ் அட்டிகலை சிபார்சு செய்திருக்கிறர். ராயல் கல்லூரியில் மாணவர்களுக்கு ஒரு நூல் நிலையத்தை அமைக்க வேண்டுமெனவும் அவர் யோசனை கூறியிருக்கிறர்.

ஆனல், வெளிமாணவர்களுக்கு ஒரு பிரத்தியேகக் கல்லூரியை நிறுவவேண்டுமென கல்வி மந்திரி கருதுவதாகத் தெரிகிறது. கங்கொடவிலையில் உபயோகப்படாமல் இருக்கும் அரசாங்கக்கட்டிடங்களை இதற்காக உபயோகித்துக்கொள்ளலாமெனவும் மந்திரி கூறியிருக்கிறர்.

## ஹிந்து ஆலயதிருப்பணிக்கு முஸ்லிம் நன்கொடை

மேலூர், ஜூன் 7

ஒரு ஹிந்து கோவில் திருப்பணிக்காக ஒருமுஸ்லிம், கணிசமான தொகையை நன்கொடையளித்திருக்கிறர்.

இங்குள்ள கல்யாணசுந்தரேசுவரர் காமாட்சி அம்மன் கோவிலின் கல்யாணமண்டபத்துக்கு திரு. கக்கன் (மராமத்து மந்திரி) அஸ்திவாரக்கல் நாட்டும் போது மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

## ஆகாசவாணி விசேஷ தபால் தலை

புதுடில்லி, ஜூலை 7

நாளை ஆகாசவாணியின் வெள்ளி விழாவை முன்னிட்டு விசேஷ தபால் தலைகள் வெளியிடப்படவிருக்கிறது.

## வரிவிளம்பர விகிதங்கள்

ஜனனம், திருமணம், மரண அறிவித்தல், வீடு வளவு விற்பனவு, தேவை மற்றும் வாங்கவோ, விற்கவோ இது போன்ற சகல அறிவித்தல்களும் 'ஈழநாடு' பத்திரிகையில் வரிவிளம்பரம் செய்ய ஏற்றுக்கொள்ளப்படும்.

முதல் 20 வார்த்தைகளுக்கு ரூ.3-00. மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் மேலதிகமாக 10 சதம் அறவிடப்படும்.

### தேவை

விவசாயப் பண்ணைகளிற் பணியாற்றுவதற்கு இளைஞர்கள் தேவை. தெரிந்தெடுக்கப்படுவோருக்கு ஆறு மாத கால இலவசப்பயிற்சியின் பின்னர் ஐந்து ஏக்கர் நிலம் செய்கைக்குக்கொடுக்கப்படும். விஞ்ஞான முறை விவசாயத்தில் ஆர்வமுள்ள இளைஞர்கள் 12-6-61 க்குமுன்னர், காரியதரிசி, நாவற்குழிக் கூட்டுப்பண்ணை, 50, பலாலி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனாம்.

வைத்தியர் பரிபூரணாநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### ஆயுள்வேத அரிய மருந்துகள்

புற்றுநோயை (Cancer) வேரறுக்குமென செயல்மூலம் நிரூபிக்கப்பட்டமருந்து "யோகீஸ்வர ரசம்". தாய்க்குலத்தாருடைய பெரும்பாடு — வெள்ளை இறைத்தல் முதலியன எட்டு நேரத்துடன் குணமடையச் செய்யும் மருந்து "பெரும்பாடு நிவாரணி". தாமதமின்றி கலந்தாலோசியுங்கள்.

பொ. செல்லையா "புற்றுநோய் நிபுணர்", ஆயுள் வேத வைத்தியர், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

### கேள்வி விளம்பரம்

**அல்லைப்பிட்டி**

**முதலாம் இலக்க ஒழுங்கை**

1961ஆம்ஆண்டு ஜூன் மாதம் 21-ந் திகதி காலை 10 மணி வரை மேற்படி வேலைக்கு சீல் வைத்த கேள்விப் பத்திரங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் 20-6-61ம் திகதி நண்பகல் 12 மணி வரை ரூபாய் 25|- கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். ஏனைய விபரங்களை எனது கந்தோரில் அறிந்து கொள்ளலாம்.

தலைவர்,
அல்லைப்பிட்டிக் கிராமச் சங்கம்,
மண்டைதீவு.

### தேவை

பலசரக்குச்சாய்ப்புச்சாமான்கள் விற்பனை செய்வதிலும் வான்மூலம் சாமான்கள் விநியோகம் செய்வதிலும் அனுபவமுள்ள ஒருவர் தேவை. விபரங்களுக்கு:-

விநோதன்ஸ் அன் கோ.
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

### சன்மானம்

'விஸ்கி எனும் பெயருடைய 3 வயதுள்ள அல்சேஷன் (பெண்) நாய் (தவிட்டு நிறம்) சென்ற 3-ம் திகதி காணமற் போய்விட்டது. கண்டு பிடித்துக் கொடுப்பவர்களுக்குத் தகுந்த சன்மானம் அளிக்கப்படும். யாழ்ப்பாணம் கரையூர் பொலிஸ் நிலையத்துக்கு விபரம் தெரிவிக்கவும், அல்லது 391க்கு போன் செய்யவும்.

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## மல்லாகக் கிராமச் சங்கம் கேள்விப்பத்திர அறிவித்தல்

1. மல்லாகக் கிராமச்சங்க அக்கிராசனரால் 1961-ம்ஆண்டு ஆனிமாதம் 17-ந் திகதி காலை 9-00 மணி வரை ஸ்ரீ முருகம்புரம் கிணறு (ஏழாலை) வேலைக்கான கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும். 2. 15-6-61 பிற்பகல் 3-00மணி வரை கேள்விப் பத்திரம் வழங்கப்படும். 3. கேள்விப்பத்திரப்பணம் ரூ. 50-00. பத்திரக்கட்டுப்பணம் ரூ. 5-00. 4. விபரம்அறிதல்:- (அ) வட பகுதி உள்ளூராட்சி உதவி அதிபர் காரியாலயம். (ஆ) மல்லாகக் கிராமச்சங்கக் காரிகாரியாலயம்.

க. சிவகுரு
அக்கிராசனர்
கி. ச. மல்லாகம்.

5-6-61

## யாழ்ப்பாண மாநகரசபை கேள்விப்பத்திர அறிவித்தல்

பெரியகடை மரக்கறிச் சந்தையில், கிழக்கு வங்களாவிற்கும் மேற்கு வங்களாவிற்கும் இடையிலுள்ள கட்டிடத்திலிருக்கும் இல. 28,97,98கொண்ட 3 முழுக் கடைகளையும், இல. 105, 106 கொண்ட 2 அரைக் கடைகளையும் வாடகைக்குக் கொடுப்பதற்கான

### கேள்விப்பத்திரம்

மேற்கூறப்பட்ட இலக்கங்களைக் கொண்ட கடைகள் பெரியகடை மரக்கறிச் சந்தைக்குள் காலியாகவுள்ளன. இக்கடைகளை 1-7-61ஆம் திகதி தொடக்கம் 31-12-63ஆம் திகதி வரை வாடகைக்குக் கொடுப்பதற்கான கேள்விப் பத்திரங்கள் 1961ம் ஆண்டு ஆனி மாதம் 15ம் திகதி (15-6-61) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிவரை கேள்விப் பத்திரம் ஒன்றுக்குப் பிணைப்பணமாக ரூபா 25|-ம் பத்திரப் பணமாக ரூபா 2-50ம் செலுத்தி இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஒரு முழுக் கடையின் மாத வாடகை ரூபா 45|-ஆகவும் ஒரு அரைக்கடையின் மாத வாடகை ரூபா 22-50 ஆகவும் இந்த வருடத்துக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மிகுதிய காலத்துக்கு அவ்வப்போது சபை வருடாந்த வாடகையை நிர்ணயிக்கும்.

கேள்விக்காரர்கள் ஒவ்வொருவரும் இந்த வருடத்துக்கு அதாவது 1-7-61ஆம் திகதி முதல் 31-12-61ஆம் திகதிவரையும் தாங்கள் கேட்கும் கடையில் இருந்து வியாபாரம் செய்யும் உரிமைக்கு, உரிமைப் பணமாக எவ்வளவு தொகை கொடுக்க விரும்புகிறார்கள் என்றும், 1962ஆம் ஆண்டுக்கும் 1963ஆம் ஆண்டுக்கும் தனித்தனியே எவ்வளவு உரிமைப் பணம் வருடா வருடம் கொடுக்க விரும்புகிறார்கள் என்பதையும் கேள்விப் பத்திரத்தில் தெளிவாகக் காட்ட வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் யாழ்ப்பாணம், மாநகரசபை ஆணையாளரினால் 1961ஆம்ஆண்டு ஆனி மாதம் 15ஆம் திகதி (15-6-61) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப் பத்திரதாரர் 24-6-61 ஆம் திகதிக்குமுன் இந்த ஆண்டுக்குரிய உரிமைப் பணத்தையும்—மூன்று மாத வாடகைப் பணத்தையும் (முற்பணமாக) செலுத்துவதுடன், 31-12-63ஆம் திகதியன்று தன்னால் நடாத்தப்பட்ட கடையைக் காலி செய்து சபைக்கு எவ்வித நஷ்டமும் விளைவிக்காமல் ஒப்படைப்பேன் என்று ஓர் உடன்படிக்கையும் எழுதி, 1-7-61ஆம் திகதி தொடக்கம் கடையை ஏற்றுக்கொள்ள வேண்டும். சபையினது உபவிதிகளுக்கும், பிரமாணங்களுக்கும் முரணான வகையில் கடை நடத்துபவர்கள், உடனடியாகக் கடைகளைக் காலி செய்ய வேண்டும். மேலும், சபை ஒரு மாத முன்னறிவித்தலுடன் கடைகளை ஒப்படைக்கும்படி கோரும் சந்தர்ப்பங்களில் கடைகளை ஒப்படைக்க வேண்டும்.

1962ஆம் ஆண்டுக்குக் கட்ட வேண்டிய உரிமைப் பணத்தை 31-12-61ஆம் திகதிக்கு முன்னரும் 1963ஆம்ஆண்டுக்குக் கட்ட வேண்டிய உரிமைப் பணத்தை 31-12-62ஆம் திகதிக்கு முன்னரும் செலுத்த வேண்டும். குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் பணத்தைச் செலுத்தத் தவறினால் வாடகை திரும்பவும் விற்கப்படும். சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பொருட்களை மாத்திரம் தான் இக்கடைகளில் விற்பனை செய்யலாம்.

கேள்விப்பத்திரதாரர் இம் மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்களாயிருத்தல் வேண்டும். அவர்கள் விரும்பியபடி ஒவ்வொரு கடைகளுக்கும் அல்லது எல்லாக் கடைகளுக்கும் கேள்விப் பத்திரங்கள் அனுப்பலாம்.

மாநகரசபையினால் கொடுக்கப்பட்ட கடைகள் நடத்துபவர்களுக்கு கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது.

இது சம்பந்தமாக மேலதிக விபரங்கள் அறிய விரும்புவோர் யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளரிடமிருந்து நேரிலோ அல்லது கடித மூலமோ அறிந்துகொள்ளலாம்.

ஆ. வ. சின்னையா,
ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகரசபை.
நபா |—

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம், 2-6-61.

# தொழில்நுட்பப் பயிற்சி பெற்றவர் வெளியேறுகின்றனர்

## பிரதமரின் கவனத்துக்கு கொண்டுவரப்படுமாம்

கொழும்பு, புதன்

தொழில் நுட்பப் பயிற்சிபெற்றவர்கள் பெருமளவில் வெளிநாடுகளுக்குச் செல்லும் விஷயத்தை பிரதம மந்திரியின் கவனத்திற்குக் கொண்டுவருவதாக செனட்சபை முதல்வரும் சுகாதார மந்திரியுமான திரு. ஏ. பி. ஜயசூரியா நேற்று செனட்சபையில் கூறினர்.

தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்கள் பெருமளவில் நாட்டை விட்டுச் செல்வது மோசமான நிலைமை உருவாகி வருவதற்கு ஒரு அறிகுறியென்று சபையின் ஒத்திவைப்புப் பிரேரணைமீது பேசிய செனட்டர் ரெஜி பெரேரா கூறினர்.

தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்கள் பெருமளவில் நாட்டை விட்டுச் செல்வது அரசாங்கத்துக்குத் தெரியுமா? என்று கேட்ட செனட்டர் ரெஜி பெரேரா இவர்கள் நாட்டை விட்டுச் செல்லும் காரணத்தை அறிந்துகொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

இலங்கை அபிவிருத்தித் திட்டங்கள் சிலவற்றை ஆரம்பிக்கும் இச்சமயத்தில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு முக்கியமான தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவது வருத்தத்துக்குரியது என்று செனட்டர் ரெஜி பெரேரா கூறினர்.

செனட்டர் ரெஜி பெரேரா கூறிய விஷயத்தை பிரதமரின் கவனத்துக்குக் கொண்டுவருவதாக திரு. ஜயசூரியா கூறினர்.

## ஜனசமூகநிலைய சமாஜம் நடத்திய சிறுகதைப் போட்டி

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாண மாவட்ட ஜனசமூக நிலையங்களின் சமாஜத்தினால் அண்மையில் நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் திரு. கச்சாய் இரத்தினம் எழுதிய "இலவுகாத்தகிளி" முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதற்கு நூறு ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்படும்.

"வேலி" என்ற கதையை எழுதிய திரு. இ. நாகராசன் இரண்டாவதாக வந்து அறுபது ரூபாய் ரொக்கப் பரிசு பெற்றுக் கொள்ளவிருக்கிறார்.

திரு. டி. ஸ்ரீஸ்கந்தராசா எழுதிய "மனம்" என்ற கதை மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. இதற்கும் ரூபாய் முப்பது பரிசு அளிக்கப்படவிருக்கிறது.

## சொத்துக்களை வெளியிட சட்டம்

### விரைவில் மசோதா வரும்

கொழும்பு, புதன்

செனட்டர்கள், பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் மற்றும் ஸ்தலஸ்தாபன அங்கத்தவர் ஆகியோர் தமது சொத்து விபரங்களை வெளியிடுவதற்கான ஒரு மசோதாவை விரைவில் சபையில் சமர்ப்பிக்கவிருப்பதாக நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயக்கா நேற்று பார்லிமெண்டில் தெரிவித்தார்.

சமசமாஜக்கட்சி எம். பி. திரு. மெரில் பெர்னாண்டோவின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே நிதி மந்திரி இத்தகவலை வெளியிட்டார்.

இம்மசோதா எப்பொழுது பார்லிமெண்டில் விவாதத்துக்கெடுத்துக் கொள்ளப்படும் என்று திரு. பெர்னாண்டோ கேட்டபோது திரு. பண்டார நாயக்கா, சபை முதல்வரே இவ்விஷயத்துக்குப் பொறுப்பானவர் என்றும், இம்மசோதா எப்பொழுது விவாதத்துக்குவரும் எனத் தாம் கூற முடியாது என்றும் தெரிவித்தார்.

# தென்கொரியாவும் வட கொரியாவும் இணைந்த சமஷ்டி

## ரஷ்யா- வடகொரியா யோசனை

மாஸ்கோ, ஜூன் 7

வட கொரியாவையும் தென் கொரியாவையும் ஒன்ருக இணைத்த ஒரு கூட்டு சமஷ்டி அரசாங்கம் அமைக்கப்படவேண்டுமென்று சோவியத் ரஷ்யாவும் வட கொரியாவும் யோசனை தெரிவித்துள்ளன.

தென் கொரியாவையும் வட கொரியாவையும் இணைத்த கூட்டு சமஷ்டி அரசாங்கம் அமைக்கவேண்டுமென்று வட கொரியா தெரிவித்த யோசனையை சோவியத் ரஷ்யா ஆதரிக்கிறதென்று வட கொரியாவுக்கு விஜயம் செய்த சோவியத் மந்திரி தெரிவித்தார்.

இரண்டு கொரியாக்களும் கொண்ட கூட்டு சமஷ்டி அரசாங்கம் அமைப்பதற்குமுன்னர் தென் கொரியாவிலுள்ள அமெரிக்கத் துருப்புகள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுவிட வேண்டும் என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

## நெற்காணிச் சட்டத் திருத்த மசோதா நிறைவேறியது

கொழும்பு, புதன்

நெற் காணிச்சட்டத் திருத்த மசோதா நேற்றிரவு 10.45மணிக்கு வாக்கெடுப்புக்கு விடப்படாமலே நிறைவேறியது.

நெற்காணிச்சட்டத் திருத்த மசோதா நிறைவேற்றப்படும் வரை அரசாங்கக் கட்சி அங்கத்தவர்கள் சபையில் பிரசன்னமாக இருந்தனர். சபை ஒத்திவைக்கப்படும் சமயத்தில் எதிர்க்கட்சியின் நான்கு அங்கத்தவர்கள் தானிருந்தனர்.

## அம்மன் வித்தியாசாலையை அரசாங்கம் பொறுப்பேற்றது

பருத்தித்துறை, வியாழன்

இந்து சமயக்கல்வி அபிவிருத்திச் சபையினரால் ஆரம்பித்து நடாத்தப்பட்ட அல்வாய் ஸ்ரீ அம்மன் வித்தியாசாலையை அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது.

வித்தியாபதியின் பிரதிநிதியாக வட்டார வித்தியாதரிசி திரு. எம். கேதுசிகாமணி பாடசாலையைப் பொறுப்பேற்ருர்.

## சுகாதார வாரம்

### கொண்டாட்டத்துக்கு பணமில்லை

யாழ்ப்பாணம், வியாழன்

அகில இலங்கை சுகாதார வாரத்தையொட்டியாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் கொண்டாட்டத்தை ஒழுங்கு செய்வதற்கு நியமிக்கப்பட்ட குழு, கொண்டாட்ட நிகழ்ச்சி நிரலை அச்சடிக்கக் கூடப் பணம் இல்லாத நிலையிலிருக்கிறதாம்.

சுகாதார வாரக் கொண்டாட்ட நிகழ்ச்சிகள் கூட குறைக்கப்பட்டுள்ளதாகவும் வழக்கமாக நடைபெறும் நல்ல ஆரோக்கியமுள்ள குழந்தைகள், தாய்மார் போட்டிதான் நடைபெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

சுகாதார வாரக் கொண்டாட்டத்துக்கு பணம் ஒதுக்குவதை மாநரசபை நிறுத்திக் கொண்டதுதான் நிதிக் கஷ்டத்துக்குக் காரணமென அறியப்படுகிறது.

## நல்லூரில் வள்ளுவர் விழா

"திருக்குறளைக் கற்றுணர்ந்து அதன்படி ஒழுக வேண்டும். அப்பொழுதுதான் நாம்வள்ளுவனுக்கு விழாவெடுப்பதின் பயனைப்பெற முடியும்". இவ்வாறு நல்லூர், சங்கிலியன் மன்றம் நடத்திய வள்ளுவர் விழாவில் ஆசிரியர் வ. சி. நடராசா கூறினர்.

இவ்விழாவில் திருவாளர்கள் மு. பழனியப்பன், வ. சிவப்பிரகாசம், க. நடராசா, ந. விஜயேந்திரன், அ. மகேஸ்வரன், செல்வன் கு. சண்முகநாதன் ஆகியோரும் சொற்பொழிவாற்றினா

# அஸ்ஸாம் மொழிச் சட்டம் திருத்தப்படும்

## முதன் மந்திரி சாலிகா அறிவிப்பு

### கச்சார்ஜில்லா கிளர்ச்சியின்விளைவு

ஷில்லாங், ஜூன் 7

**"அஸ்ஸாம் ராஜ்ய மொழிச்சட்டத்தில் திருத்தம் செய்யப்படும்" என்று அஸ்ஸாம் ராஜ்ய முதன் மந்திரி திரு. பி. பி. சாலிகா நேற்று அறிவித்தார்.**

கச்சார் ஜில்லாவில் வங்காள மொழியிலிருந்து அஸ்ஸாம் மொழிக்கு நிர்வாக அலுவல்களை மாற்றும்படி மகாசங்க பரிஷத்துக்கு விடுக்கப்பட்ட உத்தரவு ரத்துச்செய்யப்படும்.

"கச்சார் ஜில்லா மக்களின் உணர்ச்சியையும் பிரதம மந்திரி, உள்நாட்டு மந்திரி ஆகியோரின் யோசனையையும் கொண்டே ராஜ்ய மொழிச் சட்டத்தைத் திருத்த முடிவு செய்துள்ளோம்"என்று முதன் மந்திரி திரு. சாலிகா அறிவித்தார்.

நாட்டின் நலனையும் மக்களுக்கிடையே நிலவவேண்டிய நல்லெண்ணத்தையும் உத்தேசித்து ராஜ்ய அரசாங்கத்தின் இம்முடிவுக்கு அஸ்ஸாம் மக்கள் ஆதரவு தருவார்களென்றும் ஒத்துழைப்பு அளிப்பார்களென்றும் சாலிகா நம்பிக்கை தெரிவித்தார்.

சிறுபான்மையினரின் மொழி உரிமைகளுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற இந்திய மத்திய அரசாங்கத்தின் கொள்கையை அஸ்ஸாம் ராஜ்ய அரசாங்கம் ஏற்கனவே ஏற்றுக்கொண்டுள்ளது என்று முதன்மந்திரி தெரிவித்தார்.

ராஜ்யத்தில் சிவில் சேவை போன்ற அரசாங்க உத்தியோகங்களுக்கு அஸ்ஸாம் மொழி தெரிந்திருக்கவேண்டுமென்ற கட்டாயம் எதுவும் விதிக்கப்படவில்லை என்று திரு. சாலிகா தெரிவித்தார்.

அரசாங்கத்துக்குவரும் அஸ்ஸாம் மொழியில் அல்லாத இதர மொழிக் கடிதங்களுக்கு இந்தியில் அல்லது ஆங்கிலத்தில் பதிலளிக்கப்படும்.

**ஆங்கிலம் நீடிக்கும்**

கச்சார் ஜில்லா பகுதியில் வங்காள மொழியிலிருந்து அஸ்ஸாம் மொழிக்கு நிர்வாக அலுவல்களை மாற்றும் திட்டத்தை ரத்துச்செய்ய முடிவு செய்துள்ளதால் இனி அங்கு நிர்வாக அலுவல்கள் ஆங்கிலத்திலேயே நடைபெறும். இந்தியில் அலுவல்கள் செய்யப்படும்வரை ஆங்கிலம் அங்கு நீடித்திருக்கும்.

**சாஸ்திரி திருப்தி**

அஸ்ஸாம் மொழிப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுகாண்பதற்காக முயற்சிசெய்ய அஸ்ஸாம் ராஜ்யத்துக்குச் சென்ற இந்திய உள்நாட்டு மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி நேற்று ஷில்லாங்கிலிருந்து புதுடில்லிக்குப் புறப்பட்டுச்சென்றார். தனது முயற்சி பெருமளவு வெற்றியளித்துள்ளதாக திரு. சாஸ்திரி திருப்தி தெரிவித்தார்.

புதுடில்லிக்குச் செல்லும் வழியில் கல்கத்தா டமடம் விமான நிலையத்தில் மேற்கு வங்க முதன்மந்திரி டாக்டர் பி. ஸி. ராயை திரு. சாஸ்திரி சந்தித்துப் பேசினர்.

அஸ்ஸாமில் திரு. சாஸ்திரியின் முயற்சி நெருக்கடியைத் தணித்துள்ளதாக டாக்டர் ராய் பின்னர் நிருபர்களிடம் கூறினர்.

'மக்கள் விரும்புவதற்கும் அவர்களுக்குக் கிடைக்கக்கூடியதற்கும் இடையில் ஒருவழியைக் காண்பதுதான் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குள்ள ஒரே வழி' என்று டாக்டர் ராய் தெரிவித்தார்.

அஸ்ஸாம் ராஜ்ய மொழியாக வங்காள மொழியையும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கோரி கச்சார் ஜில்லாவில் நடந்த கிளர்ச்சியைத் தொடர்ந்து சில்சார் பகுதியில் கலகம் ஏற்பட்டதும் இக்கலகத்தில் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பதினெரு பேர் கொல்லப்பட்டதும் இதன்பின் அஸ்ஸாம் மொழிப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுகாண்பதற்கு முயற்சி செய்யுமுகமாக திரு. லால்பகதூர் சாஸ்திரி அங்கு அனுப்பி வைக்கப்பட்டதும் வாசகநேயர்களுக்குநினைவிருக்கலாம்.

## பஞ்சாப் முதன்மந்திரி எச்சரிக்கை

கல்கத்தா, ஜூன் 7

அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய எந்த நடவடிக்கையையும் பஞ்சாப் அரசாங்கம் முறியடிக்கத் தயாராக இருக்கிறது என்று பஞ்சாப் ராஜ்ய முதன் மந்திரி நேற்று எச்சரித்தார்.

பஞ்சாபி மொழி பேசும் தனி ராஜ்யம் கோரி சாகும்வரை உண்ணுவிரதமிருக்கப் போவதாக மாஸ்டர் தாராசிங் தெரிவித்துள்ளதைக் குறிப்பிட்டே பஞ்சாப் முதன் மந்திரி இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

"அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய எந்த நடவடிக்கையையும் அடக்கி விடத்தயாராக இருக்கிறோம். எந்தப் பயமுறுத்தலுக்கும் நாம் பணிந்து விடமாட்டோம்" என்று முதன் மந்திரி கூறினர்.

## வியன்ணுவுக்கு ஐ. நா. தலைமைக் காரியாலயம்?

### சோவியத் ரஷ்யா முயற்சி

நியுயோர்க், ஜூன் 7

ஐ. நா. தலைமைக் காரியாலயத்தை ஆஸ்திரிய தலைநகரான வியன்ணுவில் அமைப்பதற்கு ஆஸ்திரிய அரசாங்கம் சம்மதமளிக்குமா? என்று சோவியத் ரஷ்யா ஆஸ்திரிய அரசாங்கத்தை உத்தியோகபூர்வமாகக் கேட்டுள்ளதாக நேற்று ஆஸ்திரிய மந்திரியொருவர் தெரிவித்தார்.

ஐ. நா. தலைமைக் காரியாலயம் இப்பொழுது நியுயோர்க்கில் உள்ளது.

ஐ. நா. தலைமைக் காரியாலயத்தை வியன்ணுவுக்கு மாற்ற வேண்டுமென்று அமெரிக்காவும் ரஷ்யாவும் விரும்பினல் வியன்ணுவில் அதற்கு இடம் கொடுப்பதற்கு ஆஸ்திரிய அரசாங்கம் தயாராக இருப்பதாக ஆஸ்திரிய அரசாங்கம் ரஷ்யாவுக்குத் தெரிவித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

## டாக்டர் அடினேர் திருப்தி

பொன், ஜூன்7

சோவியத்பிரதமர்குருஷேவும் அமெரிக்க ஜனதிபதி கென்னடியும் வியன்ணுவில் சந்தித்துப் பேசியதன் முடிவுபற்றித் தாம் பரம திருப்திகொண்டுள்ளதாக மேற்கு ஜேர்மன் அதிபர் டாக்டர் அடினேர் தெரிவித்துள்ளார்.

## மைசூரில் கூட்டுப்பண்ணை

பங்களூர், ஜூன் 7

மைசூர் ராஜ்யத்தில் ஐந்து ஜில்லாக்களில் ஐந்து பரீட்சார்த்த கூட்டுப்பண்ணைகள் அமைக்க மைசூர் ராஜ்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இத் திட்டம் வெற்றியளித்தால் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வேறு பல ஜில்லாக்களிலும் கூட்டுப்பண்ணைகள் அமைக்கப்படும்.

## நாகதம்பிரான் பிரதிஷ்டை

முள்ளியவளை,புதன்

வற்ருப்பளை கண்ணகிஅம்மன் கோவில் வீதியில் நாகதம்பிரானின் திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது.

# 'வியன்ணுபேச்சுவார்த்தை பெரும் பயனளித்தது

## அணு ஆயுத பரீட்சை விஷயத்தில் பேரிடி!'

### கென்னடி அறிவிப்பு

வாஷிங்டன், ஜூன் 7

"வியன்ணு பேச்சுவார்த்தைகள் காரணமாக லாவோஸ் நிலைமையில் முன்னேற்றம் ஏற்படலாமென்று எதிர்பார்க்கலாம். ஆனல் அணு ஆயுதப் பரீட்சைத் தடை விஷயத்தில் இவ்வித நம்பிக்கையை எதிர்பார்க்க முடியாது" என்று அமெரிக்க ஜனதிபதி கென்னடி நேற்று அமெரிக்க மக்களுக்கு வானெலியிலும் டெலிவிஷனிலும் விடுத்த அறிக்கையில் தெரிவித்தார்.

பாரிஸ், வியன்ணு, லண்டன் ஆகிய இடங்களுக்குச் சென்று ஜெனரல் டிகால், சோவியத் பிரதமர் குருஷேவ், பிரிட்டிஷ் பிரதமர் திரு. மாக்மிலன் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு வாஷிங்டன் திரும்பிய ஜனதிபதி கென்னடி சோவியத் பிரதமர் குருஷேவுடன் தாம் நடத்திய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பேச்சுவார்த்தை பற்றி தமது மக்களுக்குக் கூறினர்.

வானெலியில் பேசிய ஜனதிபதி கென்னடி, சோவியத் பிரதமருடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகள் பெரும் பயன் அளித்துள்ளதாகத் தெரிவித்தார்.

"வியன்ணு பேச்சுவார்த்தைகள் சலுகைகளையோ, நன்மைகளையோ ஏற்படுத்தவில்லை; சலுகைகளையும் நன்மைகளையும எதிர்பார்த்து அச்சந்திப்பு நடைபெறவில்லை. பேச்சுவார்த்தைகளில் பெரிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவுமில்லை; பெரிய தீர்மானங்கள் மேற்கொள்ளும் உத்தேசமும் இருக்கவில்லை. சந்திப்பினல் பிரமாத முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை; பிரமாதமான முன்னேற்றம் ஏற்படுமென்று சொல்லிக் கொண்டதுமில்லை" என்று திரு. கென்னடி அறிவித்தார்.

"பெரிய பிரச்சினைகளை நாங்கள் இருவரும் மனம்விட்டுப் பேசினேம்" என்று ஜனதிபதி கூறினர்.

எங்கள் சந்திப்பு இருதரப்பிலும் ஆபத்து விளைவிக்கக் கூடிய தப்பபிப்பிராயங்களை நீக்கிவிட்டது" என்று திரு. கென்னடி சொன்னர்.

"உலக சமாதானத்தைப் பொறுத்தவரை நாம் எதுவித முடிவும் செய்யாவிட்டாலும் உலகின் சமாதானப் பிரச்சினை யாரிடமிருக்கிறதோ அவர்கள் பரஸ்பரம் தொடர்பு கொள்வதென்று ஒப்புக்கொண்டதே பெரிய விஷயமல்லவா?" என்று திரு. கென்னடி கூறினர்.

வியன்ணு சந்திப்பு லாவோஸ் நிலைமையில் முன்னேற்றம் ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கலாம் என்று தெரிவித்த திரு. கென்னடி, அணு ஆயுத பரீட்சையைப் பொறுத்தவரையில் இவ்வித நம்பிக்கை கொள்ள முடியாது" என்ருர்.

"அணு ஆயுத பரீட்சைகளைப் பொறுத்தவரையில் எமது நம்பிக்கைகளுக்குப் பேரிடி விழுந்திருப்பதாகக் கூறலாம்"என்று திரு. கென்னடி குறிப்பிட்டார்.

மேற்கு ஜெர்மன் சம்பந்தமாக மேற்கு நாடுகள் அந்நாட்டின் மீதுள்ள உறவையும் உரிமையையும் கடமையையும் இழந்து விட முடியாதென்பதை திரு. குருஷேவிடம் வற்புறுத்திக் கூறிவிட்டதாக திரு. கென்னடி தெரிவித்தார்.


**பற்றறிகள்**

சார்ச் செய்தும்

பழுது பார்த்தும்

உத்தரவாதத்துடன்

கொடுக்கப்படும்.




**முருகன் எலக்றிக்கல் ஸ்ரோர்ஸ்**

6/8, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**மொணரு அன் ரோஸ் பப்படங்கள்**

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

MONARA PAPPADAM மொணரு TRADE MARK 18502

மொணரு அன் ரோஸ் பப்படங்கள்

மூவர்ண கலர் லேபிளுடன் மயில் – ரோஸ் அடையாள மிட்டு

ROSE FLOWER BRAND BEST PAPPADAM. REGD. TRADE MARK No 18255 A.M. BUHARI. 255, 5th CROSS ST., COLOMBO.

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்:

**ஏ. எம். புகாரி அன் கோ**

99, நாலாம் குறுக்குத் தெரு,

கொழும்பு.

### மணிவாக்கு

பக்தர்கள் பலவீனர்கள் போலக் காணப்படலாம். ஆனால் கடவுளின் போர் வீரர்களல்லவா? இவர்களுக்குக் கோழைத்தனம் கிடையாது. மூடபக்தியும் கிடையாது. கடவுளை நினைத்ததும் சோர்வும் பயமும் பறந்து போகின்றன. —பி. ஸ்ரீ

ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
வைகாசி மீ 26வ. (8-6-61)

EELA NADU: National Tami Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.

## வகுப்புவாத ஆபத்து

கொழும்பிலே கந்தசாமி ஞாபக தினக் கூட்டத்தில் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா பேசுகையில், தொழிலாளர் இயக்கத்திலே வகுப்புவாதம் புகுவதற்கு இடமளிக்கக் கூடாதென்று எச்சரித்தார். வகுப்புவாதம் புகுமானால், தொழிலாளர் இயக்கமே நசிந்துபோய் அது தற்கொலை செய்துகொள்வதாக முடியுமென்று சரியாக அறிவுறுத்தினார்.

இன்று இலங்கை அரசியலில் புகுந்த வகுப்புவாதம் தொழிலாளர் இயக்கத்திலும் மெதுவாகப் புகுந்து வருவதைப் பார்க்கின்றோம். அரசாங்க குமாஸ்தாக்களிடையிலும் கூட கலாசாரமென்ற போர்வையிலே வகுப்புவாதம் தலைதூக்கி வருகின்றது. எக்காரணம்பற்றியும் இதை அனுமதிப்பதாயின், அரசாங்க நிர்வாகத்துக்கே அது பெருந் தீங்காக முடிவதுடன், அரசாங்க குமாஸ்தாக்களிடையே பிளவுகள் ஏற்பட்டு, அவர்களது நன்மையும் பாதிக்கப்படும். பொது மக்களின் நம்பிக்கையையும் நிர்வாகம் இழக்கக் கூடும்.

அரசியல் வாதிகளில் சிலர் வகுப்புவாதத்தைக் கிளப்பி தேர்தலில் வெற்றிபெறவும் அதிகாரத்தைக் கைப்பற்றவும் முயலுகின்றனர். இலங்கையில் மட்டுமல்ல அண்டையிலுள்ள இந்தியாவிலும்கூட இந்த விஷமம் அதிகரித்து நாட்டின் அமைதி கெட்டு முன்னேற்றமும் தடைபடுவதாகவுள்ளது. இந்த ஆபத்தை உடனடியாக நீக்காவிட்டால், நாடு நாசமாகுமென்று பிரதமர் நேரு எச்சரிக்கின்றார். வகுப்புவாதக் கட்சிகளை தேர்தலுக்கு நிற்காமல் தடுக்கவேண்டுமென்றும் அங்கு யோசனை செய்யப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கதாகும். இதிலிருந்து இலங்கையிலுள்ள நாமும் நல்ல பாடம் கற்க வேண்டும்.

அரசியல் சுதந்திரம் பெற்ற நாம் இன்னும் பொருளாதார சுதந்திரம் பெறவில்லை. உண்மையான அந்த சுதந்திரம் பெறவேண்டுமாயின் நாட்டில் அமைதியும், மக்களிடையே ஒற்றுமையும் நிலவவேண்டும். ஆனால் சில சுயநலமிகள் வகுப்புவாத விஷத்தை நேர்முகமாகவும் மறைமுகமாகவும் புகுத்துவதால், மக்களிடையே துவேஷ உணர்ச்சிகளும் மனக்கசப்புகளும் அதிகரித்து, ஒற்றுமை குலைந்து, நாடு முன்னேற முடியாமலும், மக்களின் வேலையில்லாக் கஷ்டம், பொருளாதார சங்கடம் முதலியவை தீர முடியாமற் போவதாகவுள்ளது. இந்த ஆபத்தை உணர்ந்து, வகுப்புவாதத்துக்கு பொதுமக்களும் சிறப்பாக அரசாங்கமும் சற்றும் இடமளிக்கக் கூடாது. வகுப்புவாதத்தைக் கிளப்பி விடுகிறவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்து அவர்களைத் தண்டிக்கவும் இந்தியாவில் சட்டம் உருவாகிவருவதாகத் தெரிகிறது. வகுப்புவாத விஷத்தை ஒழிக்க அங்கு அரசாங்கம் எடுக்கும் இந்த நடவடிக்கை, இலங்கைக்கும் ஒரு வழிகாட்டியாக இருக்கவேண்டும். அழகான நமது சிறிய தீவு வகுப்புவாத ஜுரத்தால் பிடிக்காமல் தடுக்க அரசாங்கம் மட்டுமன்றி பொதுமக்களும் மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

# உலகப் பணியில் ஒரு புது முயற்சி

## ஊதியமின்றி உழைக்கும் அமைதிப் படைத் தொண்டர்கள்

— ரோஜர் மார்கலாண்ட் —

மற்ற நாடுகளிலுள்ள மக்களுக்குத் தொண்டாற்ற முன்வர அமைதிப் படை அமெரிக்க மக்களுக்கு வாய்ப்பளிக்கும்.

சரியான பயிற்சி பெற்றோரும், சிறுது பயிற்சி பெற்றோரும் இத் திட்டத்தின்படி வெளிநாடுகளுக்கு ஓராண்டு முதல் மூன்றாண்டுக் காலத்துக்கு அனுப்பப்படுவர்.

மொழிப் பிரச்சினையைத் தீர்க்கும்பொருட்டு அமெரிக்காவில் மொழி அறிவூட்டும் பயிற்சி நிலையங்கள் நிறுவப்படும். அவற்றில் இரண்டு மாதம் முதல் ஆறு மாதம் வரை பயிற்சி அளிக்கப்படும். வெளிநாடுகளில் அவர்கள் செய்யப் போகும் பணிக்குத் தகுந்தவாறு பயிற்சிக்காலம் எத்தனை மாதம் என்று, விதிக்கப்படும். பணி செய்ய வேண்டிய நாடு போய்ச் சேர்ந்ததும், அவர்களுக்கு மீண்டும் பயிற்சி அளிக்கப்படும். அவர்கள் தொண்டாற்றும் நாட்டில் தங்கள் கருத்துக்களை வெளியிடக் கூடியவர்களாக இருக்கவேண்டும் என்பதே மொழிப் பயிற்சியின் நோக்கம்.

அமைதிப்படை தங்கள் நாட்டுக்கு வேண்டும் என்று கேட்கும் நாடுகளுக்கே அப்படை அனுப்பப்படும். தொண்டர்கள் வயது பற்றிய வரையறை கடுமையாக இல்லை. 18 வயது முதல் எத்தனை வயதுள்ளவர்களும் படையில் சேரலாம்.

### பணி வகைகள்

பல்வேறு முறைகளில் இயங்கும்படி அமைதிப்படை தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ளது. முதலாவது, அது அமெரிக்க நண்பர் சங்கம், கேர் சங்கம் முதலியவற்றின் மூலம் பணியாற்றலாம் என்று கருதுகிறது. மேற்கண்ட தனியார் நிலையங்களின் பணியை வெளிநாடுகளில் விரிவுபடுத்த அமைதிப்படை உதவி செய்யும். அமைதிப்படையின் நோக்கத்துக்கு அப்பணிகள் பொருந்துவனவாக இருக்க வேண்டும்.

இரண்டாவது, அமெரிக்கப் பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் புதிய திட்டங்களைத் தொடங்கி வைத்து அவற்றின் மூலம் வெளிநாடுகளில் சில கல்வித் திட்டங்களை நடத்தலாம் என்று அதிகாரிகள் நம்புகிறார்கள்.

மூன்றாவது, ஐ. நா. வின் சிறப்பு நிலையங்கள் தொடங்கியுள்ள திட்டங்களில் மக்கள் கலந்து கொள்ளும் வாய்ப்பளிக்க அமைதிப்படை கருதுகிறது.

நான்காவது, இப்பொழுது உள்ள அமெரிக்க அரசாங்க வெளிநாட்டுத் தொழில் நுட்ப உதவி, பொருளாதார உதவித் திட்டங்களுக்குத் தொழில் செய்யும் தொழில் நுட்ப சாலிகள் கிடைக்கச் செய்ய வேண்டும் என்றும் அது கருதுகிறது.

இறுதியாக, பல திட்டங்களை அமைதிப்படை நேரில் நடத்தும். அவை பெரிய திட்டங்களாகவும், சிக்கலானவையாகவும், புதுமையானவையாகவும், அவசியமானவையாகவும் இருப்பவை. எனவே, மற்ற முறைகள் மூலம் அவற்றை நடத்தி வைக்க முடியாது.

தொண்டர்கள் எவ்வாறு தெரிந்தெடுக்கப்படுகிறார்கள்?

அவர்கள் பரீட்சைகள் எழுத வேண்டும். உடல் நிலை நன்கு சோதிக்கப்படும். நேரில் பரீட்சிக்கப்படுவர். அவர்களது தொழில் நுட்பத் திறன் பரீட்சிக்கப்படும். அனுபவம், உடல் நலம், நோக்கம் ஆகியவை கவனிக்கப்படும். அமெரிக்காவில் அமைதிப்படையில் சேர மக்கள் முன்வருகின்றனர். இது மிகவும் ஊக்கமூட்டுவதாகும். ஏப்ரல் மத்திக்குள் 25,000 கடிதங்களுக்கு மேல் வாஷிங்டனிலுள்ள அமைதிப் படைத் தலைமையகத்துக்கு வந்துள்ளன. அமைதிப்படை பற்றிய விவரங்களைக் கேட்டு மக்கள் எழுதியிருக்கின்றனர்; விண்ணப்பத் தாள்களும் கேட்டிருக்கின்றனர்.

தொழில் பயிற்சியும், அனுபவமும் பெற்றவர்கள் பலர் விண்ணப்பம் செய்துள்ளனர். புதிதாக வளர்ச்சி அடையும் நாடுகள் பலவற்றிலிருந்து வரும் அழைப்புகளுக்கு இணங்கத் தொழில் பயிற்சி பெற்றவர்கள் அங்கு அனுப்பிவைக்கப்படலாம்.

### கைமாறு கருதாப் பணி

அமைதிப் படைத் தொண்டர் ஊதியமின்றி உழைப்பர். அவர்கள் பணி செய்யும் நாட்டிலே அதே பணி செய்வோர் போல் அவர்களும் வாழ்க்கை நடத்தும் பொருட்டு, அதற்குத் தகுந்த வாழ்க்கைப்படி அவர்களுக்குக் கொடுக்கப்படும். உதாரணமாக வெளிநாட்டில் ஆசிரியராகத் தொண்டாற்றும் அமெரிக்கர், தாம் தொண்டு செய்யும் நாட்டிலுள்ள ஆசிரியரைப் போல வாழ்க்கை நடத்துவார்.

அமைதிப் படைத் தொண்டர்கள், தொழில் திறமையும் பயிற்சியும் உள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் ஆலோசனை கூறும் அதிகாரிகளாக இருக்கக் கூடாது. அவர்கள் உழைப்பாளிகளாக இருக்கவேண்டும். உதாரணமாக, சிலர் நர்ஸ்களாகப் பணியாற்றலாம்; பலர் பயிற்சி பெற்ற தொண்டர்களாகப் பண்ணைகளில் வேலை செய்யலாம்.

தொழில் நுட்ப உதவித் திட்டம், மற்ற வெளிநாட்டு உதவித் திட்டம் ஆகியவற்றின் மூலம் அமெரிக்கா முன்போல் வெளிநாடுகளுக்கு நிபுணர்களை அனுப்பிக்கொண்டிருக்கும்.

(8-ம் பக்கம் பார்க்க)

# அண்டவெளிப் பயண ஆராய்ச்சிகளில் ஜேர்மன் சங்கத்தின் முதல் வெற்றி

கக்ஸ்ஹேவன், ஜூன் 6

சப்தம் செல்லும் வேகத்தை விட இரட்டிப்பு மடங்கு வேகமாகச் செல்லக்கூடிய ராக்கெட்டுக்கள் சில, ஜேர்மன் வடகடல் கரையிலிருந்து பேரிரைச்சலுடன் பிரயோகிக்கப்பட்டன. இவை 60,000 அடி உயரம் வரை சென்றன. பிரயோகிக்கப்பட்ட நான்கு ராக்கெட்டுகளும் வெற்றிகரமாகச் செலுத்தப்பட்டது குறித்து விஞ்ஞானிகள் திருப்தி தெரிவித்திருக்கின்றனர்.

ஜேர்மன் ராக்கெட் சங்கத்தின் முதல் வெற்றி இது. இச் சங்கம் பத்து வருடங்களுக்கு முன்பு பிரெமன் என்ற ஜேர்மன் நகரில் 11 மேற்கு ஜேர்மன் விஞ்ஞானிகளை அங்கத்தினர்களாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இன்று இச் சங்கத்திலுள்ள அங்கத்தினர்களின் எண்ணிக்கை 850. இவர்கள் 14 தேசங்களைச் சேர்ந்தவர்கள். பெரும்பாலோர் ஐரோப்பியநாட்டினரே. வானவெளிப்பயணத் துறையில் தன்னாலான ஆராய்ச்சிகள் முடிவைக் கண்டு பிடித்து அறிவிப்பதே இச்சங்கத்தின் முக்கிய நோக்கமாகும். இதை இச்சங்கத்தின் தலைவரும் சர்வதேச வான வெளிப்பயணக் கழக உபதலைவருமான திரு. ஏ. எப். ஸ்டாடா தெளிவு படுத்தியிருக்கிறார். ஜேர்மன் மாக்ஸ்-பிளாங் வானவெளிப் பயணக் கழகத்தைச்சேர்ந்த பேராசிரியர் ஹெமெர்ட் ஒரு எலெக்டிரானிக் அளவு கருவி ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறார்.

வடகடல் கரையிலுள்ள ராக்கெட் பிரயோக ஸ்தலம் அமெரிக்காவிலுள்ளது போல பிரமாத ஏற்பாடுகள் கொண்டதல்ல. ஜேர்மன் ராக்கெட்டுகள் 6 அடி உயரமும் 7 அங்குல விட்டமுமுள்ளவைகளே. இவை 10 அடி உயரமுள்ள ஏணி போன்ற சாதனங்களில் அமைத்துப் பிரயோகிக்கப்படுகின்றன.

இந்த ராக்கெட்டுகளைக் கொண்டு வான நிலையை அறிவதற்கான சில தகவல்களைக் கண்டு பிடிக்க ஜேர்மன் விஞ்ஞானிகள் முயல்கின்றனர். மிகவும் உயரச் செல்லும் போது காற்று வேகம் எப்படி என்பதை ராக்கெட்டிலுள்ள கருவிகள் பதிவு செய்யும். மேற்கொண்டு வான வெளி ஆராய்ச்சிகளுக்கு இம்மாதிரித் தகவல்கள் மிகவும் உபயோகமாக உள்ளன.

இவ்வருடம் இருகட்ட ராக்கெட்டுகளைச் செலுத்தவும் அவைகளில் சில வற்றில் சில பிராணிகளை வைத்து அனுப்பவும் ஜேர்மன் விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர். இந்த இருகட்ட ராக்கெட்டு 210,000 அடி உயரம் வரை செல்லக் கூடியது. ராக்கெட் மோட்டார்களுக்கு ஏற்ற எரிவஸ்து எது என்பதைக் கண்டு பிடிக்கவும் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. திரவ எரிவஸ்துதான் ஏற்றது என்றாலும் கெட்டியான எரி வஸ்துவைத்தான் ஆராய்ச்சிகளில் உபயோகிக்க அனுமதிக்கப்பட்டு வந்திருக்கிறது.

ஜேர்மன் ராக்கட் சங்கம் ஒரு தனிப்பட்ட ஸ்தாபனம். இதற்கு அரசாங்க ஆதரவு இல்லை. சிரத்தையுள்ள சில ஜேர்மன் வர்த்தக ஸ்தாபனங்கள் இச்சங்கத்திற்கு நிதி உதவுகின்றன. குறைந்த பணவசதி, நிறைந்த ஆர்வம் இவைகளைக் கொண்டு ஏராளமான விஷயம இத்துறையில் சாதிக்கப்பட்டுள்ளது.

## ஐயாறன் எழுதுவது

" அடங்கிப்போ " என்று கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் கணவன்மார்களுக்கு அன்று ஒரு யோசனை கூறினார் அல்லவா? அதைப் படித்துவிட்டு ஓர் அன்பர், "நல்ல முஸ்பாத்தி. ஆனால் ஆடவர்களுக்கெல்லாம் இது அவமானமாக இருக்கிறதே" என்றார்.

இதற்கு நேர்மாறான ஒரு யோசனையை நேற்று மாலை திருகோணமலை சிவானந்த தபோவனத்தைச்சேர்ந்தமாதாஜி, யாழ்ப்பாணத்திலே செட்டித் தெருவிலே நடைபெற்ற திவ்ய ஜீவன சங்க பிரார்த்தனைக் கூட்டத்தில் பெண்களுக்குக் கூறினார்.

"பெண்கள் தங்கள் கணவன்மார்களை கடவுளாகக் கொண்டு பணி செய்யவேண்டும். மாமியார் வீட்டிலே பல துன்பங்கள் இருக்கலாம். ஆனால் அத்துன்பங்களையெல்லாம் கணவன்மார்களுக்காக சகித்து அன்புப் பணி செய்வதால், பெண்களின் மனம் பக்குவமும் பண்பாடுமடைகின்றது. மனம் பண்பாடு அடைவதே வாழ்க்கையில் சாந்திக்கும் இன்பத்துக்கும் வழிகாட்டும்"....என்று அங்கு கூடியிருந்த பெண்மணிகளுக்கு நல் யோசனை கூறினார். இதைக் கேட்க ஆண்களுக்கு பெரிய ஆறுதலாக இருக்கலாம். மனைவிமார் தங்கள் புருஷர்களை கடவுளாக மதிக்க வேண்டுமாயின், புருஷர்களும் தங்கள் மனம் பண்பாடடைய, மனைவிமார்களை தேவிகளாக மதித்து நடத்தவேண்டுமல்லவா?

ஆணும், பெண்ணும் சிவசக்தி வடிவங்கள் என்ற உண்மையை திருவையாற்றிலே திருநாவுக்கரசர் உணர்ந்து கைலாசக் காட்சியை அங்கு "கண்டறியாதனக் கண்டேன்" என்று பாடியது குறிப்பிடத்தக்கது.

* * *

மாதாஜி இன்னும் பல நல்ல யோசனைகளை பெண்களுக்குச் சொன்னார். "சமூகம் திருந்தி முன்னேற வேண்டுமாயின் அது பெண்களாலேயே முடியும். இக்காலத்தில் ஆபாச சினிமாக்களும் புத்தகங்களும் மலிந்து மனதைக் கெடுக்கின்றன. இரவு கிளப்புகள் உடலைக் கெடுக்கின்றன. இந்த நவநாகரீகமெனும் கூடாத பழக்கவழக்கங்களை விடவேண்டும். அன்றாடம் வீட்டுக்காரியங்களுக்கான டைம்டேபிளை நிகழ்ச்சி நிரலை வகுத்துக் கொண்டு, அதன்படி காலத்தை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். ஒரு நிமிஷத்தையும் வீணாக்கக் கூடாது" என்று கூறி, இறைவன் நாமம் வாழ்க்கையைத் தூய்மையாக்கி இன்பத்துக்கு வழிகாட்டுமென்றார்.

* * *

மாதாஜி அவர்கள் திருகோணமலையிலே, சிவானந்த தபோவனமென்ற ஸ்தாபனத்தை அமைத்து, மேலான பணி செய்து வருகின்றார்கள். செல்வக் குடும்பத்தில் பிறந்தும், விவாகம் செய்துகொள்ளாமல், துறவியாகி, தம்மை சமூகப் பணிக்கு அர்ப்பணித்துள்ளார்கள். ரிஷிகேசத்திலுள்ள சுவாமி சிவானந்தரிடம் துறவு பெற்ற அவர்கள்தான் இலங்கையில் பணி செய்ய, அங்கிருந்த யோகிராஜ் சச்சிதானந்தரை அழைத்துவந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

## பர்மிய ரயில்வே கமிஷனர்

### இலங்கை வருகிறார்

ரங்கூன், ஜூன் 7

பர்மா ரயில்வே கமிஷனர் நாளை கொழும்புக்குப் பிரயாணமாகிறார். இவர் இந்தியாவிலும் பம்பாய், புதுடில்லி, சென்னைபோன்ற முக்கிய நகரங்களுக்கு விஜயம் செய்வார்.

# போர்ச்சுக்கலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும்

## பாதுகாப்புச் சபையில் ரஷ்யப் பிரதிநிதி யோசனை

நியூயோர்க், ஜூன் 7

அங்கோலா நிலைமைபற்றி விவாதிப்பதற்காக கூடிய ஐ. நா. பாதுகாப்புச் சபையின் அவசரகூட்டத்தில் பேசிய பிரதிநிதிகள் அங்கோலாவில் போர்ச்சுக்கல் நடத்தும் கொடுமையைக் கண்டித்தனர்.

அங்கோலாவில் அடக்குமுறையை உடனடியாக நிறுத்துமாறும் அங்கோலா நிலைமைபற்றி ஆராய ஐ. நா. பொதுச்சபை நியமித்த ஐந்து நாடுகளைக்கொண்ட உபசபையை அங்கோலாவுக்குச் செல்ல அனுமதிப்பதுடன் அதற்கு ஒத்துழைப்பு அளிக்கும்படியும் போர்ச்சுக்கலைக் கேட்டுக்கொள்ளும் பிரேரணையொன்றை, ஐக்கிய அரபுக் குடியரசு, லைபீரியா, இலங்கை ஆகிய மூன்று நாடுகளும் பாதுகாப்புச்சபையில் சமர்ப்பித்துள்ளன.

அங்கோலா நிலைமை சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்புக்கும் ஆபத்தை விளைவிக்கக்கூடியதென்றும் அப்பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பிரேரணையைக்கொண்டு வந்து லைபீரியாப் பிரதிநிதி பேசுகையில் அங்கோலாவில் ஆயிரக்கணக்கான மக்கள் கொலை செய்யப்படுகிறார்களென்றும் விசாரணையின்றிப் பலர் தூக்கிலிடப்படுகிறார்களென்றும் இந்த மோசமான அடக்குமுறை நடவடிக்கையை போர்ச்சுக்கல் உடனடியாக நிறுத்தவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

ஐக்கிய அரபுக் குடியரசுப் பிரதிநிதி பேசுகையில் அங்கோலாவில் போர்ச்சுக்கல் தனது அடக்குமுறை நடவடிக்கையை நிறுத்திக்கொள்ளவிட்டால் ஆபிரிக்க நாடுகள் தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டி நேரிடுமென்றும் இது உலக அமைதியைப் பாதிக்குமென்றும் கூறினார். அங்கோலா நிலைமையைக் கவனித்தால் அங்கு போர்ச்சுக்கல் யுத்தப் பிரகடனம் செய்துள்ளதாகத் தோன்றுகிறதென்று அரபுக் குடியரசுப் பிரதிநிதி கூறினார்.

அங்கோலாவில் இனஒழிப்பு நடைபெறுகிறது என்றும் அரபுக் குடியரசுப் பிரதிநிதி சொன்னார்.

### எதிர்ப்பு நடவடிக்கை

சோவியத் ரஷ்யப் பிரதிநிதி திரு. ஸோரின் பேசுகையில் அங்கோலாவில் போர்ச்சுக்கல் செய்யும் கொடுமைகளை எதிர்த்து மேற்கு நாடுகள் எதுவுமே சொல்லவில்லையென்றார்.

ஐ. நா. சபையின் தீர்மானங்களைப் போர்ச்சுக்கல் இனியும் தொடர்ந்து மீறி நடந்தால் போர்ச்சுக்கல் மீது ஐ. நா. சபை எதிர்ப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திரு. ஸோரின் கூறினார்.

இக்குற்றச்சாட்டுக்களை மறுத்து போர்ச்சுக்கல் பிரதிநிதி பேசுகையில் அங்கோலா போர்ச்சுக்கலின் உள்நாட்டு விவகாரமென்றும் இதில் தலையிட ஐ. நா. ஸ்தாபனத்துக்கு உரிமையில்லையென்றும் கூறினார்.

---

## பெண் குழந்தை ஆணாக மாறியது

ஹோசூர், ஜூன் 7

திருச்சி, கோவை போன்ற இடங்களில் பழனியம்மாள், மாரியம்மாள், ராஜாம்மாள் ஆகிய பருவப் பெண்கள் ஆணாக மாறியது வாசகர்கள் அறிந்த விஷயம்.

ஆனால் தற்சமயம், சேலம் ஜில்லாவில் கிருஷ்ணகிரி நகரில் இதைவிட அதிசயமான அதிசயமொன்று நடந்திருக்கிறது.

கிருஷ்ணகிரியில் ஒரு முஸ்லிம் பெண்ணுக்கு பிறந்த ஒரு பெண் குழந்தை பிறந்த 40 நாட்களிலே ஆண் குழந்தையாக மாறிவிட்டது.

---

## 3-வது திட்டத்தில் நெசவாளருக்கு ரூ. 8 கோடி உதவி

### —திரு. நாச்சிமுத்து தகவல்

கோயமுத்தூர், ஜூன் 7

கைத்தறி நெசவாளர்களின் பொருளாதார புனருத்தாரணத்துக்காக மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ரூ. 32 கோடியில் சென்னைக்கு ரூ 8 கோடி கிடைக்கும் என சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் திரு. எம். பி. நாச்சிமுத்து இங்கு கூறினர்.

நெசவாளருக்கு உதவும் திட்டத்தின்படி அவர்களுக்காக கூட்டுறவு நெசவு மில்களும், சாயத் தொழிற்சாலைகளும் நிறுவப்படும். நெசவாளர்களுக்கு வீட்டு வசதியளிக்க குடியேற்றத் திட்டங்கள் ஏற்படுத்தப்படும். சேமலாப நிதிவசதிகளும் அவர்களுக்கு அளிக்கப்படும்.

---

## மார்க்கெட் விலைவாசிகள்

யாழ்ப்பாணம், வியாளன்

மார்க்கெட்டிங் இலாகா (யாழ்ப்பாணக்கிளை) இவ்வாரம், சில்லறையாக காய்கறிகளை விற்கும் விலை கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. குறிக்கப்பட்ட விலைக்கு பொது மக்கள் காய்கறிகளை வாங்கலாம்.

| | | ரு—ச |
|---|---|---|
| கோவா | ருத்தல் | 0 - 55 |
| புடலங்காய் | ” | 0 - 18 |
| கத்தரிக்காய் | ” | 0 - 38 |
| போஞ்சி(பட்டர்) | ” | 0 - 65 |
| போஞ்சி(மற்றரகம்) | ” | 0 - 65 |
| காரட் | ” | 0 - 75 |
| லீக்ஸ் | ” | 0 - 55 |
| சாம்பல் வாழைக்காய் | ” | 0 - 15 |
| பிஞ்சுமிளகாய் | ” | 0 - 60 |
| வெண்டைக்காய் | ” | 0 - 45 |
| பொன்னங்காணி | ” | 0 - 22 |
| வல்லாரை | ” | 0 - 90 |
| பூசனிக்காய் | ” | 0 - 14 |
| சுத்தமான நெய்போத்தல் | | 6 - 50 |
| நாட்டு பச்சை அரிசி (தலைவெட்டியது) | கொத்து | 0- 65 |
| புழுங்கல் அரிசி (தலைவெட்டியது) | கொத்து | 0- 75 |

### கட்டுப்பாட்டு விலை

| | |
|---|---|
| உருளைக்கிழங்கு (இந்தியா) | 0 - 33 |
| உருளைக்கிழங்கு (இத்தாலி) | 0 - 27 |
| மிளகாய் (1-ம் நம்பர்) | 1 - 24 |
| ஸயாம் மிளகாய் | 1 - 03 |
| சின்னச் சீரகம் | 0 - 98 |
| மஞ்சள் | 0 - 57 |
| ஜப்பான் மல்லி | 0 - 95 |
| உளுந்து | 0 - 32 |
| பாசிப்பயறு | 0 - 36 |
| துவரம்பருப்பு | 0 - 30 |
| கடலைப்பருப்பு | 0 - 48 |
| சிந்தாமணிக் கடலை | 0 - 43 |
| பம்பாய் வெங்காயம் | 0 - 20 |

முருங்கைக்காய் 1க்கு 0-40 சதம். மிளகு 1 ருத்தல் ரூ. 3-22. (கட்டுப்பாட்டு விலை இல்லை)

---

## திரு. கோபாலன் உண்ணாவிரதம் ஆரம்பித்தார்

திருவனந்தபுரம், ஜூன் 7

லோகசபையில் கம்யூனிஸ்ட் கோஷ்டியின் உபதலைவரான திரு. ஏ. கே. கோபாலன், கோட்டயத்திலிருந்து சுமார் 70 மைல் தூரத்தில் உள்ள அமராவதியில் நேற்றுக்காலையில் உண்ணாவிரதம் ஆரம்பித்தார்.

ரிசர்வ் காட்டுப் பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட நபர்களிடம், மனிதத்தன்மையற்று நடந்துகொண்டதைக் கண்டிக்கும் வகையில் இந்த நடவடிக்கையை திரு. கோபாலன் மேற்கொண்டதாக இங்குள்ள கம்யூனிஸ்ட்கட்சித் தலைமை நிலையத்திற்கு கிடைத்த சில தகவல்கள் கூறுகிறது.

'வெளியேற்றப்பட்டகுடும்பங்களின் அவதியை அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டுவதே உண்ணாவிரதத்தின் நோக்கமாகும்' என்று குமுலியில் உண்ணாவிரதத்தை ஆரம்பிப்பதற்கு முன்னதாக நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் திரு. ஏ. கே. கோபாலன் கூறினர்.

---

## சில்சாரில் மீண்டும் மொழிக் கிளர்ச்சி

சில்சாார், ஜூன் 7

ராஜ்ய அரசாங்க காரியாலயங்கள், கோர்ட்டுகள் முன்னிலையில் மொழி உரிமைக் கிளர்ச்சிக்காரர்களின் மறியல் 7 நாள் இடைவேளைக்குப் பின் மீண்டும் ஆரம்பமாகியது.

வங்காளியை ஆட்சிமொழியாக அங்கீகரிக்கவும் அல்லது பதவியிலிருந்து வெளியேறவும்' என்று கோஷித்துக்கொண்டு சிறுவர்கள் ஊர்வலம் சென்றார்கள்.

மொழிக்கிளர்ச்சியை நடத்தும் சங்க்ரம் பரிஷத் தலைவர் திரு. அப்துல் ரஷ்மான் இது பற்றிப் பேசுகையில், 'வங்காளியை மற்றொரு ஆட்சிமொழியாக அங்கீகரிக்க வேண்டும் என்பதே பரிஷத்தின் நோக்கமாகும். இதைவிட வேறில்லை' என்று தெரிவித்தார்.

சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்தவும், சகல மக்களிடையே நல்லுறவை வளர்க்கவும் ஒத்துழைக்குமாறு அனைவரையும் கச்சார் உதவி கமிஷனர் திரு. ஆர். கே. ஸ்ரீ வஸ்தவா கேட்டுள்ளார்.

---

## மனநோய்க்கு மருந்து வள்ளுவரின் குறள்

யாழ்ப்பாணம், வியாழன்

'சகல நோய்களுக்கும் மருந்து கண்டுபிடித்து விட்டார்கள். மன நோய்க்கு மட்டும் இன்னும் மருந்து கண்டுபிடிக்கவில்லை. ஆனால் இந்நோய்க்கு மருந்து வள்ளுவன் கூறிய 'தனக்குவமை இல்லாதான் தாழ்சேர்வது' தான். இவ்வாறு யாழ்ப்பாண மத்திய கல்லூரி தமிழ்மன்றத்தினரால் கொண்டாடப்பெற்ற திருவள்ளுவர் விழாவில் பேசிய பண்டிதர் மு. சின்னத்தம்பி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. ஏரம்பமூர்த்தி பேசியதாவது:-

'காகம் கரைந்து தன் இனத்தை அழைத்து உண்பது போல் நாமும் பகுத்து உண்ணப் பழகிக்கொள்ளவேண்டும். இதுவே வள்ளுவன் காட்டிய வழி.

விழாவில் பல மாணவரும் பங்கு பற்றினர்.

---

## விஸாவழக்கில் தீர்ப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதற் கெதிராக உத்தரவிட்டிருப்பதாய் ராமசாமி வாதித்தார். அவருக்கு நாடுகடத்தும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாயும், அவருக்களிக்கப்பட்ட விசா செல்லாதென்றும் ராமசாமிக்குத் தெரிவிக்கப்பட்டது.

நீதிபதி தமது தீர்ப்பில், குறிக்கப்பட்ட அதிகாரிக்கு, விசாவை ரத்துசெய்யும் அதிகாரம் உண்டு என்பதற்கு சட்டம் இடமளிபதாய்கூறினர்.

---

## இந்தியாவுக்கு கடன் கொடுக்க அமெரிக்கா கொஞ்சமும் பயப்படாது

### "அதன் திருப்பியளிக்கும் சக்தி நன்கு நிரூபிக்கப்பட்டுவிட்டது"

புதுடில்லி, ஜூன் 7

"இந்தியாவுக்குக் கடன் அளித்தால் அது எவ்வாறு கடனைத்திருப்பித்தரும்என்பது பற்றி அமெரிக்காவுக்குக் கொஞ்சம் கூடப் பயம் கிடையாது" என இங்குள்ள யு. எஸ். தூதர் அறிவித்தார். இந்தியா, வாங்கும் கடனை ஒழுங்கான முறையில் செலுத்திக்கொண்டிருப்பதாயும், கடனைத் திருப்பியளிக்கும் இந்தியாவின் சக்தி நன்ருக நிரூபிக்கப்பட்டுவிட்டதென்றும் அவர் கூறினர். இந்தியாவின் திட்டங்கள் வெற்றியளிக்கும் என்பதிலும் மேற்கு நாடுகளுக்குச் சந்தேகமில்லை என அவர் தொடர்ந்து கூறினர்.

---

## தலைமையாசிரியர்மீது ஒழுங்கு நடவடிக்கை

கொழும்பு, புதன்

சென்ற கிழமை இடிந்து விழுந்த களன்கமுவ சிங்கள கலவன் பாடசாலையில், கல்வி இலாகாவின் அனுமதியின்றி அக்கட்டடத்தில் குடியிருந்த அப்பாடசாலையின் தலைமையாசிரியருக்கெதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பத்திரிகைகளுக்கு கல்வி அமைச்சு விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை மேலும் தெரிவிப்பதாவது:-

சில தினங்களுக்கு முன்னர் இடிந்து விழுந்த இப்பாடசாலை பற்றி கண்டி கல்வி அதிகாரி விசாரணை நடத்தினர். பெற்றோர் - ஆசிரியர் சங்கத்தினல் இடிந்து விழுந்த இப்பாடசாலைக் கட்டடம் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்தது.

இப்பாடசாலையின் தலைமை ஆசிரியர் கல்வி இலாகாவின் அனுமதியின்றி இப்பாடசாலைக் கட்டடத்திற்குள் குடியிருந்தார். வழக்கமான நடைமுறைப்படி, பெற்றோர்- ஆசிரியர் சங்கத்தினலோ அன்றி எந்தவித சங்கத்தினலும் அமைக்கப்பட்ட கட்டடத்தில், பாடசாலை வேலைப் பகுதியின் தொழில் நுட்ப அதிகாரியைத்தவிர வேறு எவரும் குடியிருக்க முடியாது. இக்கட்டடம் பெற்றோர்- ஆசிரியர் சங்கத்தினல் அமைக்கப்பட்டதே தவிர தொழில் நுட்ப அதிகாரிகள் எவரும் இக்கட்டடத்தைப் பார்வையிடவில்லை. இக்கட்டடம் பதிவானது மட்டுமன்றி மிகவும் மோசமான நிலையிலும் இருந்தன.

இப்படியான கட்டடங்களில் குடியிருப்போர்களுக்காக விதித்த நடைமுறையை பின்பற்ருமல், இருந்த காரணத்திற்காக இப்பாடசாலையின் தலைமை ஆசிரியர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலை திருத்தப்படாத காரணத்தினல்தான் இடிந்து விழுந்ததென்று கூறுவது சரியல்ல. காயமடைந்த 14 பேரில் 4 பேர்தான் மருத்துவ உதவி பெறுகிருர்கள். காயமடைந்த மற்றையோர் ஆஸ்பத்திரியினின்றும் வெளியேற்றப்பட்டுவிட்டனர்.

---

## இந்தியாவில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### தெ. இ. பிலிம் வர்த்தகர் சங்கத்தின் கவலை

"இந்திய சினிமாப்படங்களுக்கு இலங்கையில் கிராக்கி உண்டு. ஆனல் சமீபகாலத்தில் இடையூறுகள் ஏற்பட ஆரம்பித்திருக்கின்றன. இந்திய சினிமாப்படங்களின் இறக்குமதிக்கு இலங்கை அரசாங்கத்னர்கட்டுப்பாடுகளைஏற்படுத்த ஆரம்பித்திருக்கின்றனர். இந்தக் கட்டுப்பாடுகள் அதிகரித்துக்கொண்டிருக்கின்றன. இந்தக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படாவிடில் இந்திய சினிமாடடங்கள் இலங்கை மார்க்கெட்டை இழந்துவிடும். முக்கியமாக தென் இந்திய சினிமாப் படத் தொழிலுக்கு கஷ்டமான பிரச்சினை ஏற்படும்." என்பதாக தென் இந்திய பிலிம் வர்த்தக சங்கத்தின் தலைவரான ஸ்ரீ ஏ. எல். சீனிவாசன் இங்கு கூறினர்.

---

## ஹவானாவில் நடுநிலைமை அதிபர்கள் மகாநாடு

### கெய்ரோ மகாநாட்டில் கியுபா மந்திரி வற்புறுத்து

கெய்ரோ, ஜூன் 7

இலங்கை உட்பட 22 நடுநிலைமை நாடுகளின் உச்சி மகாநாட்டை ஹவானாவில் நடத்தவேண்டுமென கெய்ரோவில் நடைபெற்ற ஆயத்தக் கமிட்டிக் கூட்டத்தில் கியூபா வெளிநாட்டு மந்திரி டாக்டர் ர்ா கூறினர்.

மகாநாட்டை நடத்துவதற்கான இடத்தையும் நிகழ்ச்சி நிரலையும் இந்தக் கூட்டம் தெரிவு செய்யும்.

நடுநிலைமை நாடுகளின் உச்சி மகாநாட்டைக் கூட்டும் யோசனை சென்ற ஏப்ரல் மாதம் யூகோஸ்லேவிய ஜனதிபதி மார்ஷல் டிட்டோ, ஐக்கிய அராபியக் குடியரசு ஜனதிபதி நாஸர் ஆகியோரால் வெளியிடப்பட்டது,

---

## இரு எம். பி. க்களுக்கு உபகாரச் சம்பளம்

கொழும்பு, புதன்

பாராளுமன்ற அங்கத்தினர்களான திரு. யு. பி. வீரசேகரா, திரு. ஸி. எஸ். ரத்வத்தை ஆகிய இருவரும் அமெரிக்காவில் உபகாரச்சம்பளம் ஒன்றின் கீழ் சென்றிருக்கிருர்கள். அமெரிக்காவில் நவீன முறையில் நடைபெறும் விவசாய, நீர்ப்பாசன முறைகளைப்பற்றி அவர்கள் பயில்வார்கள்.

---

## சர்வகலாசாலைக்கு தெரிவு

கொழும்பு, புதன்

1960 டிசம்பரில் நடைபெற்ற தமிழ் "டிப்ளோமா" பிரவேசப் பரீட்சை முடிவின்படி கீழ்க்கண்டவர்கள் சர்வகலாசாலை பிரவேசத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டிருக்கிருர்கள். கே. குகதாசன், செல்வி எஸ். தெய்வநாயகம், எம். வேலாயுதம் பிள்ளை.

# திருக்கோணமலை பட்டினசபைக்கு 'மீன்'கொடி

## சுகாதார சீர்கேட்டை நீக்க தலைவர் நடவடிக்கை

திருக்கோணமலை, புதன்

திருக்கோணமலைப் பட்டின சபையின் மாதாந்தக் கூட்டம் சபைத் தலைவர் டாக்டர் எஸ். சிவானந்தம் தலைமையில் நடைபெற்றது.

பட்டினசபை நிர்வாகம் பட்டின சபைக்குச் சேர வேண்டிய மதிப்பு வரியைச் சேகரித்தல் ஆகியவற்றில் சபைக் காரியதரிசி போதிய கவனம் செலுத்தவில்லை என சபை அங்கத்தவர்கள் கூட்டத்தில் குற்றம் சாட்டினர்.

திருக்கோணமலை நகரத்தின் சுகாதார நிலை நல்ல நிலையில் இல்லை என்றும், உணவு விடுதிகள் மிகவும் அசுத்தமாக இருப்பதாகவும் திரு. இ. சோமசுந்தரம், திரு. எஸ். எச். சோமபால ஆகிய அங்கத்தவர்கள் சுட்டிக்காட்டினர்.

தலைவர் இது குறித்துப் பேசுகையில், சட்டத்துக்கமைய வசதிகள் செய்யப்படாத உணவு விடுதிகளுக்குத் தாம் 'லைசன்ஸ்' வழங்க மறுத்துள்ளதாகவும் சுகாதாரம் சம்பந்தமாக தாம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

பட்டின சபைக்குச் சொந்தமான மின்சார 'லைட்டு'கள், செம்புக் கம்பிகள் முதலியன களவாடப்படுகின்றன என்று திரு. இரத்தினவேலு தெரிவித்தார்.

இவ்விதம் பட்டினசபைக்குச் சொந்தமான பொருள்களைக் களவாடுபவர்மீது தாம் கடும் நடவடிக்கை எடுக்கப்போவதாகத் தலைவர் கூறினர்.

ஐந்து இலட்சம் ரூபாய்க்கும் அதிகமாக வரிப்பணம் வசூலிக்கப்பட்டாமலிருப்பதால் 1957-ம் ஆண்டுக்கும் 1960-ம் ஆண்டுக்குமிடையில் உள்ள காலம்வரையும் ஆயிரம் ரூபாவுக்கு மேல் வரி கட்டத் தவறியவர்களின் பெயர்ப் பட்டியல் ஒன்றை இம்மாதம் 15-ம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும்படி தலைவர் சபைக் காரியதரிசியைக் கேட்டுக் கொண்டார்.

பட்டினசபையின் கொடியில் 'மீன்' சின்னம் பொறிக்கப்படல் வேண்டும் என்னும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

# அதிக உதவியளிக்க சோவியத் யூனியன் சம்மதம்

## நிதிமந்திரி விஜயத்தின் பயன்

கொழும்பு, புதன்

அரசாங்கத்தின் பத்துவருட அபிவிருத்தித் திட்டத்துக்கு மேலும் கணிசமான அளவு பொருளாதார தொழில் நுட்ப உதவியளிக்க சோவியத் யூனியன் சம்மதித்துள்ளது. நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா சமீபத்தில் சோவியத் யூனியனுக்குச் சென்றிருந்தபொழுது நடத்திய பூர்வாங்க பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து மேலும் பொருளாதார, தொழில் நுட்ப உதவியளிக்க சோவியத் யூனியன் முன்வந்துள்ளது.

டயர், டியூப் தொழிற்சாலை உருக்குத் தொழிற்சாலை, போன்ற மூன்று தொழிற்சாலைகள் அமைக்கும் பெரிய திட்டங்களுக்கு பதினன்கு கோடி இருபது இலட்சம் ரூபாயை சோவியத் யூனியன் ஒதுக்கி உள்ளது.

சோவியத் யூனியன் மேலும் பொருளாதார உதவியளிக்கத் தயாராக இருந்தால் அந்தப் பணம் கந்தளாயில் மற்றெரு சீனித் தொழிற்சாலை அமைக்கவும் புத்தளத்தில் ஒரு சிமெந்துத் தொழிற்சாலையும் மற்றெரு நெசவு ஆலையும் அமைப்பதற்கும் உபயோகப்படுத்தப்படும் என்று நீதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா சோவியத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது தெரிவித்ததாக அறியப்படுகிறது.

அரசாங்கத்தின் பத்து வருடத் திட்டத்தை அமுல் நடத்துவதற்கு இருநூறு முன்னூறு பேர்களுக்குத் தொழில்நுட்பப் பயிற்சியளிக்க வேண்டியேற்படுமென்றும் நிதிமந்திரி தமது பேச்சுவார்த்தைகளின் போது தெரிவித்ததாகவும், இந்தப் பயிற்சித் திட்டத்துக்கு நிதி உதவியளிக்க சோவியத் யூனியன் ஒப்புக் கொண்டதாகவும் அறியப்படுகிறது.

# ஜப்பானில் மீண்டும் ஆர்ப்பாட்டம்

## 72 பொலிசாரும் 74 மாணவரும் காயமடைந்தனர்

## அரசியல் பலாத்காரத்தை ஒழிக்கும் மசோதா நிறுத்தப்பட்டது

டோக்கியோ, ஜூன் 7

ஜப்பானில் அரசியல் பலாத்காரச் செயல்களை ஒழித்துக் கட்டுவதற்கு பொலிசாருக்கு அதிக அதிகாரம் கொடுக்கும் மசோதாவை அரசாங்கம் கொண்டுவந்திருப்பதை எதிர்த்து சோஷலிஸ்ட் கட்சியினர் நேற்று நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பொலிசாருக்கும் ஆர்ப்பாட்டக்காரருக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டது.

சுமார் இருபத்தையாயிரம் மக்கள் கலந்துகொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் பொலிசாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டது.

இக்கைகலப்பில் சுமார் 700 பேர் காயமடைந்தனர். 72 பொலிசாருக்கும் 74 மாணவர்களுக்கும் பலத்தகாயம் ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

அரசியல் பலாத்காரத்தை ஒழித்துக் கட்டும் இந்த மசோதா இப்பொழுது பார்லிமெண்டின் இறுதிப் பரிசீலனையில் இருக்கிறது.

இந்த மசோதா முதல்தடவையாகப் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்பட்ட சமயமும் பார்லிமெண்டின் உள்ளே எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டம் செய்தனர். பார்லிமெண்ட் கட்டடத்திற்கு வெளியேயும் எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டத்துக்கு ஒழுங்குசெய்திருந்தனர். இந்த ஆர்ப்பாட்டத்திலும் ஆர்ப்பாட்டக்காரருக்கும் பொலிசாருக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டுப் பலர் காயமடைந்தனர்.

இந்த மசோதா மனித உரிமையை மறுப்பதாக இருக்கிறது என்று சோஷலிஸ்ட் கட்சி ஒரு அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

சமீபத்தில் ஜப்பானில் பொதுத் தேர்தல் நடைபெற்ற சமயம் சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் தேர்தல் கூட்டமொன்றில் பேசிக் கொண்டிருந்த போது குத்திக்கொல்லப்பட்டது நினைவிருக்கலாம்.

அரசியல் பலாத்காரத்தைத் தடுப்பதற்காக பொலிசாருக்கு அதிக அதிகாாம் கொடுக்கும் மசோதாவை நிறுத்திவைப்பதென்று ஜப்பான் அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

ஜப்பான் பிரதமர் திரு. இக்கேடா இம்மாதம் 19-ந் திகதி வாஷிங்டனுக்குப் பிரயாணமாகிருர். பிரதமர் இக்கேடா அமெரிக்காவிலிருந்து திரும்பிய பின்னர் இம்மசோதா பற்றி முடிவு செய்வதென்றும் தற்பொழுது இதை மேல்சபையில் சமர்ப்பிப்பதில்லையென்றும் அரசாங்கம் முடிவு செய்துள்ளது.


புதிய ஜவுளி வியாபாரத் திறப்பு விழா!

ராஜ் கோபால்ஸ்

இப்புதிய ஸ்தாபனம்

9-6-61

வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு

திறக்கப்படும்.

இடம்:

யாழ்ப்பாணம், பெரியகடை வீதி, 36/1 நம்பர் கட்டிடம்

(மலாயா கபேக்கு அருகாமையில்)

விற்பனை ஆரம்பம்:

9—6—61 நண்பகல் 12 மணிக்கு

ராஜ் கோபால்ஸ்

ஸ்தாபனத்தார்

ஆதரவாளர்களையும், வாடிக்கையாளர்களையும்

அன்புடன் அழைக்கின்ருர்கள்.

கிளை:

ராஜா ஸ்ரோர்ஸ்,

மெயின் வீதி,

சங்கானை.

ராஜ் கோபால்ஸ்

ஸ்தாபனத்தார்


# நூல்நிலையத்துக்கு வாங்கிய இரும்பு அலமாரிகள்

## அப்புறப்படுத்தும்படி உபகமிட்டி சிபார்சு

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலையத்துக்கு 1959-ல் புத்தகங்கள் வைப்பதற்கென்று வாங்கப்பட்ட 15,000 ரூபாய் பெறுமதியுள்ள இரும்பு அலமாரிகளை வெளியே அப்புறப்படுத்துமாறு நூல்நிலையம் சம்பந்தமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கத் தெரிவு செய்யப்பட்ட உபசபை சிபார்சு செய்திருப்பதாகத் தெரிகிறது.

இந்த அலமாரிகளுக்குப் பதிலாக நூல்நிலையங்களில் சாதாரணமாக உபயோகிக்கப்படும் கண்ணடி அலமாரிகளை வைக்குமாறும் இச்சபை தெரிவித்திருப்பதாக அறியப்படுகிறது.

யாழ்ப்பாண நூல்நிலையத்துக்கு 1959-ல் புத்தகம் வைப்பதற்கான இரும்பு அலமாரிகள் வரவழைத்தவகையில் கொழும்பிலுள்ள கம்பெனியொன்றுக்கு 15,000 ரூபாய் கொடுபட வேண்டியுள்ளதென்றும் இது திரு. அல்பிரட் துரையப்பா மேயராக இருந்த காலத்தில் வாங்கப்பட்டதென்றும் இப்போதைய மேயர் திரு. டி. எஸ். துரைராசா கடைசியாக நடைபெற்ற கூட்டமொன்றில் குறிப்பிட்டிருந்தார்.

நூல்நிலைய நிர்வாகச் சீர்திருத்தம், அபிவிருத்தி, புத்தகங்களின் தொகையை அதிகரித்தல் புத்தகவிநியோகம்முதலிய பல்வேறு விஷயங்கள் சம்பந்தமாக ஒரு உபகமிட்டி நியமித்து அதன் அறிக்கையின்படி நடவடிக்கையெடுப்பதென யாழ்ப்பாணம் மாநகர சபை சமீபத்தில் தீர்மானம் நிறைவேற்றியிருந்தது.

திரு. ஏ. விஸ்வநாதனைத் தலைவராகவுடைய 9 பேர் கொண்ட இந்த உபகமிட்டி அண்மையில் கூடி தனது முடிவுகளைச் செய்திருப்பதாகவும் இதுபற்றிய அறிக்கை பூர்த்தியாகிச் சமர்ப்பிக்கப்படவிருப்பதாகவும் தெரிகிறது.

தகுதிபெற்ற பகுதிநேர நூல்நிலையப் பொறுப்பாளர் ஒருவரை நியமிக்கவேண்டுமென்றும் நூல்நிலையப் புத்தகங்கள் திருப்பி சரிவரமுறைப்படுத்தப்பட வேண்டுமெனவும் இவ்வேலையைச் செய்வதற்கு 4 பேர் கொண்ட சபைஒன்று நியமிக்கப்பட வேண்டுமென்றும் நூல்நிலைய வாரமொன்றைக் கொண்டாட வேண்டும் என்றும் இதுசம்பந்தமாக பாடசாலைகளில் பிரசாரக் கூட்டங்களை நடத்தவேண்டுமென்றும் உபகமிட்டி தீர்மானித்ததாகத் தெரிகிறது.

இக்கூட்டத்தில் மாநகரசபை ஆணையாளர் திரு. ஏ. வி. சின்னையாவும் பிரசன்னமாயிருந்தார்.

# களியாட்டவிழா நடத்த கல்லூரிக்கு அனுமதி

யாழ்ப்பாணம், வியாழன்
களியாட்ட விழாமூலம் பாடசாலைக்குத் தேவையான தளவாடங்களை வாங்க அரசாங்கம் அனுமதித்துள்ளது. நெல்லியடி தேவரையாளி இந்துக் கல்லூரியில் 20 ஆயிரம் ரூபா செலவில் ஓர் புதிய கட்டிடத்தை நிர்மாணித்திருந்தும் அதற்குரிய தளவாடங்கள் இல்லாமையால் மேல் வகுப்பு மாணவர்கள் உட்பட பலர் தரையிலிருக்கவேண்டியுள்ள நிலைஏற்பட்டிருக்கிறது.

நிதி வசூலிக்கும்பொருட்டு பாடசாலைகளால் நடத்தப்படும் எந்த களியாட்ட விழாவுக்கும் முன்னதாகவே அரசாங்கத்திடம் அனுமதிபெற்றிருக்கவேண்டும்.

பாடசாலையில் மாணவர்கள் இருந்து படிப்பதற்கு போதிய ஆசனங்கள் இல்லாமையைச் சுட்டிக்காட்டி இவைகளை வாங்குவதற்கு நிதிசேர்க்க ஓர் களியாட்ட விழாவை நடத்த தேவரையாளி இந்துக் கல்லூரியினல் அரசாங்கத்திடம் அனுமதி கோரப்பட்டிருந்தது. களியாட்ட விழாவை நடத்த அரசாங்கம் இப்பொழுது அனுமதி வழங்கியுள்ளது.

---

மாஸ்கோ, ஜூன் 7
சோவியத் ரஷ்யாவைச் சேர்ந்த ஆர்மீனியா ராஜ்யத்தில் நூறு வயதிற்கும் மேற்பட்ட நபர்கள் சுமார் 450 பேர் இருக்கிருர்களாம்.

ஒரு லட்சம் பேருக்கு 33 நபர்கள் என்ற விகிதத்தில் இந்தக் கிழவர்கள் வாழ்கின்றனர்.

## ஈழத்து இளம் கலைஞர் மன்றம்

யாழ்ப்பாணம், வியாழன்
சென்ற ஞாயிற்றுக் கிழமை பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ஈழத்து இளம் கலைஞர் மன்றம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கையிலும் சிதறிக்கிடக்கும் இளம் கலைஞர் களை ஒன்று சேர்த்து அவர்களிடையே ஐக்கியத்தையும், பரஸ்பரம் ஒத்துழைப்பையும் ஏற்படுத்தி, அதன் மூலம் இயல், இசை, நாடகம் போன்ற கலைகளில் முன்னேற்றம் காண்பதே இம் மன்றத்தின் முக்கிய நோக்கமாகும்.

பின் வருவோர் மன்றத்தின் உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: டாக்டர் அ. வை. தங்கக்கணபதி, செயலாளர்: தி. வ. அரியரத்தினம், பொருளாளர்-ந.கணநாதன், செய்தி,பத்திரிகை ஆசிரியர்- நா. மா. கந்தசாமி. பத்துப் பேர் கொண்ட செயற்குழுவும் தெரியப்பட்டது. மன்றத்தின் சார்பில் ஒரு கதம்பவிழாநடத்துவதைனவும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் திருவாளர்கள் தி. வ. அரியரத்தினம், கோ.பரஞ்சோதி, நா.மா. கந்தசாமி, டாக்டர். அ. வை. தங்கக்கணபதி, ந. கணநாதன், கே.வி. செல்வரத்தினம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். திரு.ம. குணரத்தினத்திம் நன்றியுரையுடன் கூட்டம் இனிது கலைந்தது.

## சைக்கிள் திருட்டு யாழ்ப்பாணத்தில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், வியாழன்
யாழ்ப்பாணத்தில் சைக்கிள் திருட்டு அதிகரித்துள்ளதாகவும் பொலிசாருக்கே இது பெரிய தலையிடியை அளித்துள்ளதாகவும் தெரிகிறது. இவ்வாண்டில் இதுவரையில் சுமார் 40 சைக்கிள்கள் களவாடப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது.

இச்சைக்கிள் திருட்டுக்ளில் சம்பந்தப்பட்டவர்களென சந்தேகிக்கப்படும் சிலரைப் பொலிசார் தேடுவதாயும் இன்னும் அவர்கள் தலைமறைவாக இருப்பதாகவும் அறியப்படுகிறது.

பட்டப் பகலிலேயே நடைபெறும் இத்திருட்டை ஒழிக்கப் பொது மக்களுடைய ஒத்துழைப்பைப் பொலிசார் நாடி வருகின்றனர். சைக்கிள் பூட்டுகளை நல்லதாக வாங்கி உபயோகிக்குமாறும் தாங்கள் தாங்களே இதற்குப் போதிய பாதுகாப்பாக இருந்துகொண்டால்தான் இத்திருட்டை ஒழிக்க முடியுமெனவும் அவர்கள் மேலும் அறிவுறுத்திவருகின்றனர்.

---

## இலங்கையில் கேரள கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர்

கொழும்பு, செவ்வாய்
கேரளக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளரும், இந்தி பாராளுமன்ற அங்கத்தவருமான எம். என். கோவிந்தன் நாயர், அகில இலங்கை கள்ளுத் தொழிலாளர் சங்கத்தின் ஆண்டுவிழாவில் கலந்து கொள்ள இலங்கை வந்துள்ளார்.

---

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7, பகல் 12-45, மாலை 6, இரவு 9)

வியாழன் 8-6-61

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-30 திரைஇசை, 8-00 வாத்தியஇசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப்பதிவுகள், 5-45 திரைஇசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரினட்.

இரவு 7-00 எஸ். விஜயலட்சுமி - பாட்டு, 7-45 நேயர் விருப்பம், 8-15 'வாழ்க்கைத் திரை' - தொடர்நாடகம், 8-30 வாத்தியக் சோஷ்டி, 8-45 இஸ்லாமிய கீதங்கள், 9-15 இஸ்லாமிய நிகழ்ச்சி, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்).

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15)

காலை 7-00 இசைக்கதிர், 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 எஸ். டி. ராஜப்பா - பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 எஸ். பிச்சம்மாள் - பாட்டு, 1-30 ஜலதரங்கம், 2-10 எஸ். டி. ராஜப்பா- பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்) 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப் பாடல், 7-45 எஸ். ராஜம்- ராகம், தானம், பல்லவி 8-30 டெல்லி அஞ்சல், 8-40 திரைப்படஇசை, 9-15 சுபத்த சங்கீதம், 10-00 சங்கீதம் உருமாறிவந்துள்ளவிதம் -சித்திரம் (தமிழ்).

## இந்தியாவில் எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை

புதுடில்லி, ஜூன் 6
இந்தியாவில் எண்ணெய் சுத்திகரிப்புத்தொழிற்சாலை நிறுவ அந்நிய எண்ணெய்க் கம்பெனிகள் முன்வந்தால் அது பற்றி இந்திய அரசாங்கம் பரிசீலனை செய்யும் என்று யூனியன் மந்திரி ஸ்ரீ கே. டி. மாளவியா கூறினர்.

இதற்கு ஒரு நிபந்தனையுண்டு. எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவும் கம்பெனி; அதில் பாதிக்கும் குறைவான பங்குகள் தான் வைத்துக் கொள்ளலாம் என்று அவர் சொன்னர்.

## எறிகுண்டு வீசியதாக ஒருவர் கைது

பருத்தித்துறை, வியாழன்
மோட்டார் லொறியொன்றுக்கு பருத்தித்துறை கடைத்தெருவில் எறிகுண்டுகளை வீசியதாக சந்தேகத்தின் பேரில் சு. நேசராசா என்பவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். சிவானந்தம் என்பவரைத் தேடி வருகின்றனர்.

இந்தக் குண்டுவீச்சு சம்பவம் பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்றது. லொறியில் சென்ற இருவரும் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த ஒரு சிறுவனும் இக்குண்டு வீச்சால் காயமடைந்தனர். லொறியின் ஒரு பகுதியும் சேதமடைந்தது.


வெள்ளிக்கிழமை
9-ந் திகதி முதல் குதூகல ஆரம்பம்!

கிங்ஸ்லி (கொழும்பு)
நவா (கும்பனித்தெரு)
பிளாஸா (வெள்ளவத்தை)
மொடர்ன் (பதுளை)

பாலாஜி
பண்டரி.
ராஜகோபால்
மைனவதி
ஏ. கருணநிதி
எம். சரோஜா
நடித்த



எங்கள் குலதேவி

டைரக்ஷன்: ஏ. சுப்பராவ்
சங்கீதம்: கே. வி. மகாதேவன்

2-வது வாரம்!
பிளாஸா (வெள்ளவத்தை) மைலன் (கொழும்பு) விஜிதா (மஸ்கேலியா)
உதயகுமார், எஸ். வரலக்ஷமி, கண்ணம்பா, சூரியகலா நடித்த
ஜெய பவானி
டைரக்ஷன்: கே. பி. நாகபூஷணம்

கடைசி 2 தினங்கள் மட்டும்!
கிங்ஸ்லி (கொழும்பு)
எஸ். எஸ். ராஜேந்திரன்
பி. சரோஜாதேவி, தங்கவேலு
மற்றும் பலர் நடித்த
மணப்பந்தல்


வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 5-30 மணிக்கு மட்டும்
சனி, ஞாயிறு காலை 10 மணி, பி. ப. 1-30 மாலை 5-30 மணிக்கும்
எம். ஜி. ராமச்சந்திரன் - பி. எஸ். சரோஜா
நடித்த
புதுமைப்பித்தன்

மனோஹரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 5-30 மணிக்கு
சிவாஜி கணேசன் - பத்மினி நடித்த
பாக்கியவதி

தினசரி 2-00, 3-45க்கு — சனி, ஞாயிறு 10-30க்கும்
பிரிஜட் பாடோ நடித்த
வுமன் லைக் சேத்றன்
WOMAN LIKE SATAN
(ENGLISH)



பிரசித்திபெற்ற புதிய
டெலிபங்கன்
ரேடியோகிராம் D 789



TELEFUNKEN

வாலநட் அல்லது எல்ம கபினெட்டுகளில் உள்ளன.
தானே இயங்கும் ரிக்கார்ட் மாற்றும் கருவி.
இசைத்தட்டுகள், ஒலிப்பதிவுநாடாக்கள் வைப்பதற்குப்போதிய அளவு இட விசாலம்.
9 கிரியையுடைய 7 வால்வகள்.
5 அலைக் குழுக்கள்.
அமுக்கு பொத்தான் கட்டுப்பாடு
சுருதி நிலைத் தெரிவு.
6 ஒலிபெருக்கிகள்.
2 வூவர்ஸ்.
2 டுவீட்டர்ஸ்.
2 ஸ்டாட்டிக் டுவீட்டர்ஸ்.

உஷ்ணப் பிரதேசத்திற் கேற்ப தயாரிக்கப்பட்டது.

டெலிபங்கன்

இயக்கிக்காட்ட கீழ்க்கண்ட விலாசத்திற்கு விஜயஞ்செய்யுங்கள்.
CWE
போன்: 2082

# செனட் சபையில் விசா வரி மசோதா நிறைவேறியது

கொழும்பு, புதன்

செனட்சபையின் நேற்றைய கூட்டத்தில் விசாவரி மசோதா வாக்கெடுப்புக்கு விடப்படாமலே இரண்டாம், மூன்ரும் முறையாகவும் நிறைவேறியது.

செனட்சபையின் நேற்றைய கூட்டத்தில் நீதிமந்திரி சாம். பி. ஸி. பெர்னுன்டோ விசா வரிமசோதாவை இரண்டாவது தடவையாகச் சமர்ப்பித்தார்.

இலங்கையில் தற்காலிகமாக வசிக்கும் இலங்கையரல்லாதார் ஒவ்வொரு வருக்கும் வருடத்துக்கு 400 ரூபாய் வரி விதிக்கபபடும் எனறு நிதி மந்திரி திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா 1960ம் ஆண்டு செப்டம்பர்மாதம் தமது வரவுசெலவுத திட்டப் பிரசங்கத்தில தெரிவ்ததிருந்தாரென்று நீதி மந்திரி சாம் பி. ஸி. பெர்னுன்டோ கூறினர்.

இலங்கைக்கு வரும் நிபுணர்கள் மறறும தூதுக்குழுவினர் போன்றவர்களுக்கு இந்த மசோதா விலக்களிக்கிறது என்று நீதிமந்திரி கூறினர்.

இந்த மசோதா தெளிவாக இல்லையென்று செனட்டர் டொரிக் டீ' சூசா கூறினர்.

இலங்கையில் 55 வருடம் வசித்த ஒருவர் இங்கு நிரந்தரமாகவே இருந்துவிட விரும்புகிருரென்றும் அவர்கூட வரி செலுத்த வேண்டுமா? என்றும் திரு. டொரிக் டீ' சூசா கேட்டார்.

தனிப்பட்ட எவர் சம்பந்தமாகவும் விலக்களிப்பதோ, சிறப்பளிப்பதோ சாத்தியமில்லையென்றும் எந்த வகுப்பினருக்கும் குறிப்பிட்ட எவருக்கும் 'கஸட்' அறிக்கை மூலம் மந்திரி வரிவிலக்களிக்க முடியும் என்று நீத்மத்திரி சாம் பி. ஸி. பெர்னுன்டோ கூறினர்.

மசோதா வாக்கெடுப்புக்கு விடப்படாமலே இரண்டாம் மூன்ரும் முறையாகவும் நிறைவேறியது.

## உலகப் பணியில்...

(4-ம பககத் தொடர்ச்சி)

தொழிலில் முழுததிறனும் பயிற்சியும உளவவர்களும ஓரளவு பயிறசி உள்ளவர்களும் பல நாடுகளில் தேவைப்படுகின்றனர். அந்த இடங்களில புதிய திட்டம் உதவியாக இருககும.

1961-ல அமைதிப்படை வேண்டும என்று கேட்டுள்ள எட்டு முதல பதது நாடுகளுக்கு 500 முதல் 1000 தொணடாகளை அனுப்ப அமைதிப் படை ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது.

சிக்காகோ வணிகத் தலைவரும், ஜனுதிபதி கென்னடியின் மைத்துனருமாகிய ஆர். சார்ஜன்ட் ஷிரிவர் அமைதிப்படையின் டைரக்டர்.

சர்வதேச ஒத்துழைப்பில் இது சரியான பரிசோதனைத் திட்டம். தொண்டர்கள் கற்றுக் கொடுக்கும்போதே கற்கவும் வேண்டும். மற்ற நாடுகளின் பிரச்னைகளைச் சரியாய் உணர்ந்துகொள்ளத் தொண்டர்கள் வாய்ப்பு பெறுகின்றனர். புதிதாய் வளர்ச்சி அடையும் நாடுகளின் அவசரத் தேவைக்குப் பயிற்சி பெற்றவர்களை அனுப்பப் படைக்கு ஓர் வாய்ப்புக் கிடைக்கிறது.

## சர்ச்சிலின் மகள் பொலிஸ்காரரைத் தாக்கினர்

பிரைட்டன், ஜூன் 7

சர்ச்சிலின் புதல்வியும், சினிமா நடிகையுமான ஸாரா சர்ச்சில், குடித்திருந்ததாகவும், பொலிஸ்காரரை அடித்ததாகவும் குற்றம்சாட்டப்பட்டு, நீதிபதியால் அபராதம் விதிக்கப் பெற்ருர்.

இம்ம"திரியாக இவர் குற்றம் சாட்டப்படுவது இது எட்டாவது தடவையாகும்.

## ரூபாய்ஒன்றரைக்கோடி கடன்

### மின்சார விருத்திக்கு உலக வங்கி கொடுக்கிறது

கொழும்பு, புதன்

மேற்கு இலங்கையில் மின்சார விநியோகத்துக்காக உலக வங்கி மேலும் ஒன்றே முக்கால் கோடி ரூபாய் கடன் வழங்கியுள்ளது.

இது உலக வங்கி அளிக்கும் மூன்ருவது கடன்.

ஐந்தே முக்கால் சதவீத வட்டி கட்ட வேண்டிய இப்பணம் முழுவதையும் 25 வருடங்களில் இலங்கை திருப்பிக் கொடுக்க வேண்டும்.

## பிரிட்டிஷ் கொள்கை என்ன?

### அங்கோலா பற்றி தொழிற் கட்சி எம். பி. கேள்வி

லண்டன் ஜூன்7

அங்கோலா நிலைமைபற்றி லண்டன் பார்லிமெண்ட் சபையில்நடைபெற்ற விவாதத்தின் போது தொழிற் கட்சியைச் சேர்ந்த திரு. டேனிஸ் ஹீலி பேசுகையில், மனித உரிமைக்கெதிராக அங்கோலாவில் நடைபெறும் கொடுமையைப் பார்த்துக் கொண்டு பேசாது இருந்தால் பிரிட்டன் தனது கடமையிலிருந்து தவறியதாகக் கணிக்கப்படுமென் சர்வதேச திருச்சபைக் கமிஷன் தெரிவித்துள்ளது என்றும் இது விஷயமாக அரசாங்கம் இதே கொள்கையைத்தான் கொண்டுள்ளதா என்றும் கேட்டார்.

## லொறி விபத்தில் 24 பேர் பலி

மைசூர், ஜூன் 7

மைசூருக்கருகில் உள்ள ஹ"ல்லஹல்லி என்ற இடத்தில் ஏற்பட்ட கோரமான லொறிவிபத்தில் 24 பேர் மாண்டனர். இதில் 17 பேர் ஆண்கள்; 7 பேர் பெண்கள் இதவர்கள் லொறியில்சென்று கொண்டிருந்தனராம்.

லொறி வீதியில் சென்று கொண்டிருந்த போது அதன் ஸ்டியரிங்சக்கர்ம்உடைந்துபோனதால் வீதியைவிட்டு விலகி 60 அடி பள்ளத்தில் விழுந்து நொறுங்கியது. இதன் காரணமாக ஸ்தலத்திலேயே 24 பேர் பலியாயினர். 8 பேர் காயமடைந்தனர். இந்த லொறி நிறைய சாமான்கள் இருந்ததாம்.

## சீனவுடன் கடிதப் போக்குவரத்து?

ஜலந்தர், ஜூன் 7

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் கவுன்சில் எல்லைப் பிரச்சினை குறித்து சீனவுடன் கடிதப் போக்குவரத்து நடத்துகிறது என்ற பத்திரிகைச் செய்தியொன்றை, பஞ்சாப் கம்யூனிஸ்ட் கட்சி காரியதரிசி திரு. எச். எஸ். சர்ஜித் மறுத்துள்ளார்.

## குன்றக்குடி அடிகளாரின் கைலாய யாத்திரை

### காந்தீய சேவாசங்கக் காரியதரிசியும் செல்கிருர்

குற்ருலம், ஜூன் 7

அகில இலங்கை காந்திய சோவாசங்கக் காரியதரிசியும் அருள்நெறிக்கழகத் தொண்டருமான திரு. எஸ். கே. வேலாயுதபிள்ளை தவத்திரு குன்றக்குடி அடிகளாரோடு ஜூலை மாதத்தில் திருக்கைலாய யாத்திரையை மேற்கொள்ளவிருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

குன்றக்குடியில் நடைபெற்ற திருமுறைவிழாவிலும் விசாக விழாவிலும் கலந்துகொள்ளுமாறு இந்தியாவிலிருந்து விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று இங்கு வந்துள்ள திரு. வேலாயுதபிள்ளை இப்பொழுது தென்னிந்திய யாத்திரையை அடிகளாருடன் மேற்கொண்டுள்ளார்.

திரு. வேலாயுதபிள்ளை திருகைலாய யாத்திரையை முடித்துக்கொண்டு இலங்கை திரும்புவார்.

## சுவாமி சத்தியானந்தாவின் ஆத்மசாந்திக் கிரியை

யாழ்ப்பாணம், வியாழன்

கோலாலம்பூர் சுத்த சமாஜத்தில் தகனம் செய்யப்பட்ட சுவாமி சத்தியானந்தாவின் அஸ்தியை அபிஷேகம்செய்து கீரிமலைத் தீர்த்தத்தில்இடும் கிரியை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

அனுதாபக்கூட்டத்தில் அறிஞர்கள் பலர் உரைநிகழ்த்துவார்களென அறிவிக்கப்படுகிறது.

## தெங்குப் பொருள் வர்த்தக கூட்டு ஸ்தாபனம்

### அரசாங்கம் ஆரம்பிக்க வேண்டுமென சிபார்சு

கொழும்பு, புதன்

தெங்குப் பொருள் வர்த்தகத்தை மேற்கொள்வதற்கு அரசாங்க வர்த்தக கூட்டு ஸ்தாபனம் ஒன்றை நிறுவவேண்டுமென்று, தெங்குப் பொருள் விலை வீழ்ச்சிபற்றி விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட விசேஷ குழு சிபார்சு செய்துள்ளது.

உணவு, வர்த்தக அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்தின நியமித்த இந்த விசேஷ விசாரணைக்குழு, சரக்கு கொள்வனவுப் பகுதியை தெங்குப் பொருள் வர்த்தக கூட்டு ஸ்தாபனமாக மாற்றலாமெனச் சிபார்சு செய்துள்ளது.

தேங்காய் எண்ணெய், கொப்பரா போன்ற தெங்கு உற்பத்திப் பொருள்களின் விலை வீழ்ச்சியடைவதற்கு 'சோயா' அவரை உற்பத்திப் பொருள்களின் போட்டி அதிகரித்து வருவதும் முக்கிய காரணமென்று விஷேச குழு மந்திரியிடம் சமர்ப்பித்துள்ள தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் 'சோயா அவரை உற்பத்திப் பொருள் சபையின் நடவடிக்கைகளையும் அவரை உபரி உற்பத்திப் பொருள்களை அமெரிக்க அரசாங்கம் ஏற்றுமதி செய்யும் முறையையும் விசேஷ குழு தனது அறிக்கையில் விசேஷமாகக் குறிப்பிட்டுள்ளது.

ஒரு தொன்னுக்கு 245 ரூபாயாக உள்ள கொப்பரா ஏற்றுமதித்தீர்வையை 165 ரூபாயாகவும், ஒரு தொன்னுக்கு 185 ரூபாயாகவுள்ள தேங்காய் எண்ணெய் ஏற்றுமதித் தீர்வையை 123 ரூபாயாகவும் தொன்னுக்கு 135 ரூபாயாகவுள்ள தேங்காய்த் துருவலின் ஏற்றுமதித் தீர்வையை 90 ரூபாயாகவும் குறைக்க வேண்டுமென்றும் விசேஷ குழு சிபார்சு செய்துள்ளது.

சோஷலிஸ நாடுகள் பலவற்றுடன் பண்டமாற்று உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திட்டுள்ள போதிலும் அவைகள் அப்படியேயுள்ளனவென்று குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.


நல்லூர் கந்தசுவாமி கோவில்

**சகஸ்ர சங்காபிஷேக தண்டிகை உற்சவ கற்பூர விழா**

இன்று நடைபெறும் (8 - 6 - 61)

காலை 6-00 மணி: சங்காபிஷேக ஆரம்பம்
காலை 10-00 மணி: காலசந்திப் பூஜை
காலை 10-30 மணி: கதாகாலட்ஷேபம்

" மங்கையர்க்கரசி "

என்னும் பொருள் பற்றி ஸ்ரீ C. S. S. மணிபாகவதர் அவர்கள் கதாப்பிரசங்கம்.

மாலை 6-00 மணி: இரண்டாம் காலப்பூஜை
மாலை 6-30 மணி: ஊஞ்சல்
மாலை 7-00 மணி: தண்டிகைத் திருவிழா

குறிப்பு: இந்த நிகழ்ச்சிகள் அவசியமேற்படின் முன்னறிவித்தல் எதுவுமின்றி மாற்றம் செய்யப்படும்.

நல்லூர் தேவஸ்தானம்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஜூன் மாதம் 8-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.